வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

விரர மலர் ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 06 | 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 05 | பக்கங்கள் : 16

# தீர்வு குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகள் பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டும்

## வலியுறுத்துகிறார் சிறீதரன் எம்.பி.



யாழ்ப்பாணம், ஜனவரி 05

**தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்னவென்பது குறித்து தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் கொள்கை ரீதியில் பொது நிலைப்பாடொன்றுக்கு வரவேண்டியது அவசியம் என வலியுறுத்தியுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தற்போதைய சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடாமல் தமிழர்களுக்கு வரலாறு இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டுத்தான் ஆகவேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை. அதனை இலக்காகக் கொண்ட முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது குறித்து முதலில் எமது கட்சிக்குள் கலந்துரையாடித் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. அதனைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகள் கொள்கை ரீதியில் பொது நிலைப்பாடு ஒன்றுக்கு வரவேண்டியது அவசியம். எது எவ்வாறிருப்பினும், தற்போதைய சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடாமல் தமிழர்க்கு வரலாறு இல்லை - என்றார். (அ)

## மின்சார சட்டத்தை மீளாய்வு செய்ய குழு

கொழும்பு, ஜன. 05

இலங்கை மின்சார சட்டத்தை மீளாய்வு செய்வதற்கான அமைச்சரவை தீர்மானத்தை அடுத்து, சட்டத்தை ஆராய்வதற்காக 10 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சாரச் சட்டத் திருத்தம் தொடர்பான விரிவான மீளாய்வு மற்றும் ஒரு மாத காலத்திற்குள் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக எரிசக்தி அமைச் சினால் 10 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

15

## மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு சுகாதார அமைச்சரிடம் தீர்வு உண்டா?

### கேள்வி எழுப்புகிறார் தயாசிறி

கொழும்பு, ஜன. 05

சுகாதார அமைச்சுக்கு அளவுக்கதிகமாக நிதி ஒதுக்கப்படுவதாகவும், அதனால் தமக்கு நிதி உதவிகள் தேவையில்லை என்றும் கூறும் சுகாதார அமைச்சரிடம் மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான தீர்வு இருக்கிறதா? இவ்வாறான மமதைப் பேச்சுக்களால் மக்களுக்கு கிடைக்கவிருக்கும் நன்மைகளையும் இழக்க வேண்டியேற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இலங்கையில் முதலாவது எழும்பு மச்சைப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இந்த சிகிச்சைக்காக

15

## அரசு பதவியேற்று 100 நாள்களில் அரிசி விலை 100 ரூபாவால் உயர்வு

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 05

நாட்டு மக்களின் 76 ஆண்டு கால சாபம் குறித்து பேசிய தேசிய மக்கள் சக்தியே, இன்று மக்களுக்கு பெரும் சாபமாகியிருக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்தார்.

100 நாட்களில் அரிசியின் விலையை நூறு ரூபாவால் அதிகரிக்கச் செய்திருக்கிறது. 24 மணித்தியாலங்களில் செய்து காட்டுவதாகக் கூறிய விடயங்களில் ஒன்றையேனும் 100 நாட்கள் கடந்தும் இந்த அரசாங்கம் நிறைவேற்றவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

15

## வடக்கு கடல் தொழிலாளர் சமாசம் கடற்றொழில் அமைச்சருடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜன. 05

கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னை தொடர்பாக, கடல் தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருடன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மன்னார், முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களின் கடற்தொழில் சமாசங்கள் நேற்று கலந்துரையாடியுள்ளன.

யாழ்ப்பாணம் சென் நீக்கிலஸ் சனசமுக நிலைய மண்டபத்தில் நேற்று காலை கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் வடக்கு மாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர்

15

## சீனாவில் பரவும் வைரஸ் ஒரு தொற்று நோயல்ல!

கொழும்பு, ஜன. 05

சீனாவில் பரவிவரும் எச்.எம்.பி.வி. எனப்படும் மனித மெட்டாப்நியூமோ வைரஸ் ஒரு தொற்று அல்ல. அதே வேளை அது புதிய வைரஸூம் அல்ல. 2001ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்ட இந்த வைரஸ் குளிர்காலத்தில் சுவாச நோய்களை ஏற்படுத்துவதாகுமென ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

15

## உள்ளூராட்சித் தேர்தல் குறித்து அடுத்த வாரம் கலந்துரையாடல்

### தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 05

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு முன்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதாயின் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்தை விரைவாக திருத்தம் செய்யவேண்டும். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் குறித்து எதிர்வரும் வாரம் விசேட கலந்துரையாடலில் ஈடுபட உத்தேசித்துள்ளோமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை

15

## வவுனியாவில் இன்று காலை கூடும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி

வவுனியா, ஜன. 05

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமைக் குழுக் கூட்டம் வவுனியாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் முதல் தடவையாக கூடும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி யின் தலைமைக் குழு தேர்தல் முடிவுகள் தொடர்பில் ஆராயவுள்ளது.

அத்துடன் அடுத்த கட்டமாக எவ்வாறான செயற்பாடுகளை முன் னெடுப்பது என்பது குறித்தும் விரிவாகக் கலைந்துரையாடவுள்ளதோடு உள்ளூராட்சித் தேர்தலை முகங்கொடுப்பதற்கான

15

## பாடசாலை மாணவர்களிடையே சுவாச நோய்கள் பரவும் அபாயம்!

கொழும்பு, ஜன. 05

புதிய கல்வியாண்டின் தொடக்கத்தில், மாணவர்களிடையே சுவாச நோய்கள் பரவும் சாத்தியம் குறித்து சுகாதார அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் குழந்தைகளுக்கான சுவாச நோய்களுக்கான விசேட வைத்திய நிபுணர் சன்ன டி சில்வா கூறுகையில், பல்வேறு வைரஸ் சுவாச நோய்கள் பாடசாலைகளில் பரவக் கூடும்.

மாணவர்களின் ஆரோக்கியத்தில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை

15

## ஊடகங்களை அரசு அச்சுறுத்தக்கூடாது!

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஜன. 05

ஊடகங்கள் முன்வைக்கும் விமர்சனங்களிலுள்ள யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள அரசாங்கம் முயற்சிக்கவேண்டும். அதனை விடுத்து ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதை அனுமதிக்க முடியாது. மாறாக பிழையான அல்லது போலி செய்திகள் வெளியிடப்பட்டால் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வாறான உதவிகள் தேவை?

## ஆளுநரிடம் கேட்டறிந்தார் இந்திய துணைத்தூதுவர்

யாழ்ப்பாணம், ஜன.05

**வடக்கு மாகாணத்துக்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வாறான உதவிகள் தேவை என்று யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி கேட்டறிந்து கொண்டார்.**



வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கும், யாழ். இந்தியத் துணைத் தூதுவருக்கும் இடையிலான சிநேகபூர்வமான சந்திப்பு நேற்றுச் சனிக்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் யாழ். இந்தியத் துணைத் தூதரக முதன்மை நிர்வாக அதிகாரி ராம் மகேஷூம் பங்கேற்றிருந்தார்.

ஆளுநர் மற்றும் துணைத்தூதுவர் இருவரும் பரஸ்பரம் புத்தாண்டு வாழ்த்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களுக்கு வடக்கு மக்கள் சார்பில் ஆளுநர் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

இதேவேளை, புதிய ஆண்டில் இந்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வாறான உதவிகள் தேவை என்பது தொடர்பில் துணைத்தூதுவர் ஆளுநரிடம் கேட்டறிந்துகொண்டார். (எ-05)

# நெடுந்தாரகைப் படகின் நங்கூரத்தை காணவில்லை

யாழ்ப்பாணம்,ஜன.05

நெடுந்தாரகைப் படகின் நங்கூரம் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த தாழமுக்க காலத்தில் படகின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு, நெடுந்தீவின் மற்றொரு பகுதியில் தரித்து நிறுத்துவதற்காக இந்தப் படகு கொண்டு செல்லப்பட்டது.

இதன்போதே நங்கூரம் கடலில் காணாமல்போயுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தாரகைப் படகானது குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவு வரையான பயணிகள் போக்குவரத்து சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது.(எ)

# யாழில் வன்முறைக் கும்பலின் ஆண்டு நிறைவு கொண்டாட்டம்

## கேக் வெட்டிய காணொலியால் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜன.05

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் வன்முறைக் கும்பல் ஒன்றின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி கேக் வெட்டி கொண்டாட்டத்தில் ஈடுபட்ட காணொலியை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நவாலி பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞனே இவ்வாறு மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

# செய்தியாளர்மீது தாக்குதல் நால்வருக்கு விளக்கமறியல்

அக்கரைப்பற்று, ஜன.05

செய்தியாளர் அசேல உபேந்திர மீது தாக்குதல் மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் நால்வரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மாவட்ட நீதிவான் நீதிமன்றில் இந்த நால்வரும் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் மேற்கண்டவாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (எ)

# யாழில் எலிக்காய்ச்சலால் மேலும் இருவர் உயிரிழப்பு

## யாழ். மாவட்டத்தில் இதுவரை 8 பேர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன.05

எலிக்காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேலும் இரண்டு மரணங்கள் சம்பவித்ததாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றையதினம் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலே எலிக்காய்ச்சல் நோய் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் என 202 நோயாளர்களின் தகவல்கள் எமக்கு கிடைக்கப்பெற்றன. இவற்றிலே 94 பேருக்கு எலிக்காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 10 நோயாளர்கள் எலிக்காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இவர்களில் ஏழு பேர் பருத்தித்துறை ஆதார மருத்துவ மனையிலும், மூன்று பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை, மூவர் எலிக்காய்ச்சல் நோய் என்ற சந்தேகத்துடன் புதிதாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



இதேவேளை, கடந்த 2ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் எலிக்காய்ச்சல் காரணமாக இரண்டு இறப்புகள் ஏற்பட்டன. இதில் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்டத்தை சேர்ந்தவர். மற்றவர் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்தவர். அந்தவகையில் யாழ்.மாவட்டத்தில் எலிக் காய்ச்சல் நோய் காரணமாக இதுவரை எட்டு இறப்புகள் பதிவாகின - என்றார். (எ-05)

# லிட்ரோ எரிவாயு விலை இம்மாதம் அதிகரிக்காது

கொழும்பு, ஜன.05

ஜனவரி மாதத்தில் சமையல் எரிவாயு விலையை அதிகரிப்பதில்லை என தீர்மானித்துள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 2025 ஜனவரி மாதத்துக்கு தற்போதைய விலைகள் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை வருமாறு,

12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 3,690 ரூபாய், 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 1,482 ரூபாய், 2. 3 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 694 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# லயன்ஸ் கழகத்தால் வவுனியாவில் பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கல்

வவுனியா, ஜன.05

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் வவுனியா மாவட்ட லயன்ஸ் கழகத்தினால் (306 வி1) வவுனியாவில் பல்வேறு உதவித் திட்டங்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா லயன்ஸ் கழக தலைவர் லயன் ரி.கே.இராசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும், உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டது.




அதனடிப்படையில், கற்குழி பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் வைத்து தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மகாறம்பைக்குளம் அரசடி விநாயகர் ஆலயத்தில் வைத்து தெரிவு செய்யப்பட்ட 25 பெண் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

தொடர்ந்து சிறிராமபுரம் பகுதியில் உள்ள 50 வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

மாமடு அட்டமஸ்கட பன்சாலையில் வைத்து புதிதாக லயன் கழகத்தில் இணைந்து கெண்ட 7 பேருக்கு சின்னம் அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன், 25 பேருக்கு பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது. மேலும், 15 பேருக்கு உலர் உணவுப் பொருட்களும், 25 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் சர்வதேச லயன்ஸ் கழக ஆளுனர் லயன் ராஜித றொட்றிக்கோ, வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், வட மாகாண சங்க நாயக்க தேரர் அட்டமஸ்கட கல்யாணி திஸ்ஸ தேரர், பிரிகேடியர் நிரோசன் பெரேரா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அதிகாரிகள், சட்டத்தரணி லயன் தயாபரன், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், பொது மக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (10)

க்ளீன் சிறீலங்கா திட்டம்

# போலி குரல் பதிவு தொடர்பில் பொலிஸார் தெளிவுபடுத்தல்

கொழும்பு, ஜன.05

சமூக ஊடகங்களில் பரவி வரும் போலியான குரல் பதிவு தொடர்பில் தெளிவுபடுத்தி பொலிஸ் தலைமையகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் க்ளீன் சிறீலங்கா 2025 திட்டத்துடன் இணைந்ததாக இலங்கை பொலிஸாரால் பொதுமக்களுக்கு விடுக்கப்பட்ட விசேட அறிவித்தல் இது எனக் குறிப்பிட்டு ஒருவரால் செய்யப்பட்ட போலியான குரல் பதிவு சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் ஒரு பிரிவைக் குறிப்பிட்டு பொதுமக்கள் தங்கள் வீடுகளுக்கு முன்னால் உள்ள பகுதிகளை சுத்தமாக வைத்திருப்பது உள்ளிட்ட மேலும் சில விடயங்களை வலியுறுத்துவதாகவும், அவ்வாறு செய்யாதவர்கள் மீது 15. 01.2025 இற்குப் பிறகு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த குரல் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களில் பரவிவரும் இந்தக் குரல் பதிவு போலியானது எனவும், அவ்வாறான குரல் பதிவு இலங்கை பொலிஸாரால் வெளியிடப்படவில்லை எனவும் குறித்த குரல் பதிவை வெளியிட்ட நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கு செல்ல மறுக்கும் ஆசிரியர்களை என்ன செய்வது?

## வலய கல்வி பணிப்பாளர் கேள்வி

வவுனியா, ஜன.05

**இடமாற்றம் வழங்கியும் குறித்த பாடசாலைக்கு செல்லாத ஆசிரியர்கள் மீது என்ன நடவடிக்கை எடுப்பது. இவ்வாறு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

வவுனியா தெற்கு வலய ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேட்ட போதே அவர் இவ்வாறு பதில் கேள்வி எழுப்பினார்.

வவுனியா தெற்கு வலயத்தில் ஆசிரியர் இடம்மாற்றம் தொடர்பாக பேசப்பட்டது. செட்டிக்குளத்துக்கும், நகரப் பாடசாலைகளுக்கும் இடையில் பெரியளவில் வித்தியாசம் இல்லை. இருக்கின்ற ஆசிரியர்களை பகிர்ந்து வழங்கியுள்ளோம்.


இடமாற்றம் என்பது இடமாற்ற சபை ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. துறைசார் அதிகாரியோ அல்லது வலயக் கல்விப் பணிப்பாளரோ அதனை மேற்கொள்ளவில்லை. தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் ஆலோசித்து இடமாற்ற சபையில் தீர்மானித்து இடமாற்றம் வழக்கப்படும். மேன்முறை யீட்டு சபையிலும் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் அதனைச் செயல்படுத்தாத



ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இடமாற்றம் வழங்கப்படும் பாடசாலைக்கு ஆசிரியர்கள் செல்லமறுத்தால் வலயக் கல்விப் பணிப்பாளரால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது. அதற்கு என்ன தீர்வு என்று சொன்னால் செய்ய முடியும். அந்தத் தீர்வை வரையறுத்து தந்தால் நாம் நடவடிக்கை எடுப்போம்- என்றார். (எ)

# செயலிழந்து காணப்படும் படகு திருத்தும் நிலையம்



யாழ்ப்பாணம், ஜன.05

ஊர்காவற்துறை பகுதிக்கு சென்ற கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் ஆகியோர் ஊர்காவற்துறை இறங்கு துறையை பார்வையிட்டனர். அத்துடன் ஊர்காவற்துறையில் அமைந்துள்ள படகு திருத்தும் நிலையத்தையும் பார்வையிட்டனர்.

குறித்த படகு திருத்தும் நிலையமானது கடந்த அரசாங்கத்தால் 2021ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட நிலையில் செயலிழந்து காணப்படுகிறது.

அதில் இதுவரை ஒரு படகு மட்டுமே ஏற்றப்பட்டு காணப்படுவதாகவும், அந்த படகு திருத்தும் நிலையத்தை இயங்க வைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாவும் அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் தெரிவித்தனர். (எ-05)

# பொலிஸார் கட்டுப்பாட்டிலுள்ள காணியை விடுவிக்க நடவடிக்கை

## ஜெகதீஸ்வரன் எம். பி. தெரிவிப்பு

வவுனியா, ஜன.05

வவுனியா வடக்கு, கனகராயன்குளம் பகுதியில் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காணியை விடுவிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கனகராயன்குளம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குச் சொந்தமான காணி, 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பொலிஸாரால் பயன்படுத்தப்பட்டு வந்தது. குறித்த காணியை விடுவிக்க அப் பகுதி மக்கள் பல தடவைகள் முயன்றும் அது பயனளிக்கவில்லை. இந்த நிலையில், வவுனியா வடக்கு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் ஆராயப்பட்டது.

இதனையடுத்து வவுனியாவுக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருடனும், பிரதிப் பொலிஸ்மா அதிபருடனும் இவ்விடயம் குறித்து கலந்துரையாடியிருந்தோம்.

குறித்த காணியை உடனடியாக விடுவிக்க வன்னி பிரதிப் பொலிஸ் மா அதிபர், பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். இதனால் இக் காணி உடனடியாக விடுவிக்கப்படுகிறது என ஜெகதீஸ்வரன் எம். பி. மேலும் தெரிவித்தார். (எ)

# 50 மில்லியன் ரூபாய் பெறுமதியான பூச்சி கொல்லிகளுடன் நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஜன.05

வேலணை - துறையூர் பகுதியில் பெருமளவான விவசாய பூச்சி கொல்லி மருந்து போத்தல்களுடன் சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட குறித்த பூச்சிகொல்லி போத்தல்களை வாகனம் ஒன்றில் எடுத்துச் செல்ல முற்பட்ட வேளை, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.



இந்த பூச்சி கொல்லிகளின் ஒட்டுமொத்த விலை 50 மில்லியன் ரூபாய் என தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நால்வரும் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வியாழேந்திரனின் வாகன சாரதி விளக்கமறியலில்

மட்டக்களப்பு,ஜன.05

முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் மட்டக்களப்பு வீட்டின் முன்னாள் கடந்த 2021ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சி.ஐ.டியினரால் கொலைக் குற்றத்தின் பேரில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட வாகன சாரதி ஒருவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (எ)

# 3 இலட்சம் நாய்கடி சம்பவங்கள் நாட்டில் வருடம் தோறும் பதிவு!

கொழும்பு, ஜன.05

ஆண்டுக்கு சுமார் 3 இலட்சம் நாய் கடி சம்பவங்கள் பதிவாவதாக பொதுச் சுகாதார கால்நடை சுகாதார சேவை வைத்திய அதிகாரி யேஷான் குருகே தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் மட்டும்

## 20 பேர் உயிரிழப்பு

சுமார் இரண்டு இலட்சம் மனித விசர் நாய்க்கடி தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், கடந்த வருடம் ரேபிஸ் நோயினால் 20 பேர் உயிரிழந்ததாகவும், இதில் 11 பேர் விசர் நாய் கடியால் உயிரிழந்ததாக அவர் கூறினார்.

மீதமுள்ள 8 இறப்புகளில், விலங்கு தெளிவாக அடையாளம் காணப்படவில்லை.

இவ்வாறு, நடுத்தர வயதுடையவர்கள் அதிகமாக விலங்கு கடிக்கு உள்ளாவதாகவும், அவர்களில் 2 பேரில் ஒருவர் ஆண்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. நாய்க்கடி அதிகமாகப் பதிவாகியிருந்தாலும், கடந்த பத்து வருடங்களில் படிப்படியாகக் குறைந்துள்ளது. இருப்பினும், குரங்கு கடி அதிகரித்துள்ளது.

மனித ரேபிஸ் தடுப்பூசிகளுக்காக வருடாந்தம் 600 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பணம் செலவிடப்படுவதாக மருத்துவர் யேஷான் குருகே தெரிவித்தார்.(எ)

# நூல் வெளியீட்டு நிகழ்வு



யாழ்ப்பாணம், ஜன.05

கலாபூஷணம் சி. சிவானந்தராஜாவின் "நவாலியூர் க. சோமசுந்தரப் புலவரும் அவர் இயற்றிய பிரபந்தங்களும்" என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தில் நடைபெற்றது. (எ)

# குளத்திலிருந்து சடலம் மீட்பு

கிளிநொச்சி, ஜன.05

மனநலம் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் காணாமல் போனதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், அவரது துவிச்சக்கர வண்டி மற்றும் பாதணி என்பன கண்டு பிடிக்கப்பட்ட நிலையில் முறிப்பு குளத்தில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் அவரது சடலம் நேற்றையதினம் முறிப்பு குளத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

கிளிநொச்சியை சேர்ந்த த. சிவகுமார் என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.(எ-05)

# கடும் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜன.05

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 100 மில்லி மீற்றர் அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐவரை இலக்கு வைத்து நேற்று துப்பாக்கிச்சூடு!

## அதிகாலையில் பயங்கரம், இளைஞன் பலி

மாத்தறை, ஜன.05

**வீதியில் நடந்து சென்ற ஐவரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதில், இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். ஒருவர் படுகாயமடைந்தார்.**

வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பரதோட்டை வள்ளிவெல பகுதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


எனினும், இரண்டு பேர் மட்டுமே சுடப்பட்டதாகவும் அவர்களில் ஒருவர் உயிரிழந்ததாகவும் பொலிஸார் கூறினர்.

காயமடைந்த நபர் வெலிகம வலான மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மாத்தறை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கப்பரதோட்டை பகுதியைச் சேர்ந்த 26 வயது இளைஞனே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததுடன், காயமடைந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)



காரைதீவில் நேற்று அதிகாலை திருப்பள்ளி எழுச்சி - திருவெம்பாவை ஊர்வலம் ஆரம்பமானது.

# முன்னாள் பிரதேச சபை உறுப்பினருக்கு பிணை

கொழும்பு,ஜன.05

மில்லனிய பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ரவீந்திர நம்முனி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் கணினி குற்ற விசாரணைப் பிரிவினர் குறித்த சந்தேக நபரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிலந்தி கொட்டஹச்சி தொடர்பில் சமூக ஊடகங்களில் அவதூறான கருத்துக்களை பகிர்ந்தமைக்காக இவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# வரலாற்றில் அதிக வரி வசூலித்து இறைவரி திணைக்களம் சாதனை

கொழும்பு, ஜன.05

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வரலாற்றில் மிக அதிகமான வரி வருவாயை 2024 ஆம் ஆண்டில் வசூலித்துள்ளது.

1,958,088 மில்லியன் ரூபாய் வரியை வசூலித்துள்ளது என உள்நாட்டு இறைவரி திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 392,229 மில்லியன் ரூபாய் அதிகரிப்பு எனவும் இதன் வளர்ச்சி வீதம் 25. 1 வீதம் எனவும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அரிசி தட்டுப்பாட்டை நீக்குவதற்கு சதொச ஊடாக நெல் கொள்வனவு

கொழும்பு, ஜன.05

இம்முறை சதொச மற்றும் நெல் சந்தைப்படுத் தல் சபையின் ஊடாக நெல் கொள்வனவு செய்து அரிசியை உற்பத்தி செய்து விநியோகிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்று வர்த்தக மற்றும் வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.


அவ்வப்போது நாட்டில் ஏற்படும் அரிசித் தட்டுப்பாட்டை போக்கவும், விலையைக் கட்டுப்படுத்தவும் அரசு தலையிட்டு விவசாயிகளுக்கு உத்தரவாத விலையை பெற்றுத்தர நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அநுராதபுரம் ஓயா மடுவ . பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அரச நெல் களஞ்சிய சாலைகள் தொடர்பில் ஆராய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு விஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



சந்தையில் நிலவும் பாரிய முரண்பாடுகளை சாதகமாக பயன்படுத்தி சில அரிசி ஆலை உரிமை யாளர்கள் அசாதாரண இலாபம் ஈட்டி வருவதாகவும் அந்த முரண்பாடுகளுக்கு விடை காண அரசாங்கம் செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார். (எ)

# விகாரை கிணற்றில் வலம்புரி சங்கு மீட்பு!



களுத்துறை, ஜன.05

ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் தொடங்கொடை ஹெலதுவ பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் திருடப்பட்ட வலம்புரி சங்கு அதே விகாரையின் கிணற்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மிகவும் பெறுமதி வாய்ந்த இந்த வலம்புரி சங்கு திருடப்பட்டுள்ளதாக களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

நீண்ட நாட்களாக மேற்கொள் ளப்பட்ட விசாரணையில் வலம்புரி சங்கை திருடிய நபர் குறித்த தகவல்களை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

அவரை கண்காணித்து வந்த பொலிஸார் அவரை கைது செய்ய சென்றபோது, அந்த நபர் அப்பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த நபரின் வீட்டில் பல தடவைகள் பொலிஸார் சோதனையிட்ட போதும் வலம்புரி சங்கை கண்டுபிடிக்க முடியவில்லை.

இதேவேளை, குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தொலைபேசி அழைப்பில், குறித்த விகாரையின் கிணற்றின் அடிப்பகுதியில் வலம்புரி சங்கு ஒன்று காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வலம்புரி சங்கு மீட்கப்பட்டதுடன், இது ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் தனது விகாரையில் திருடப்பட்ட வலம்புரி என விகாராதிபதி அடையாளம் காட்டினார். (எ)

# கரிம சீனி உற்பத்திக்கு தயாராகும் அரசாங்கம்

கொழும்பு, ஜன.05

கரிம உரம் மற்றும் ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு கரிம சீனி உற்பத்திக்கு அரசாங்கம் தயாராகி வருகிறது.

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி லங்கா சீனி கம்பனிக்கு சொந்தமான பெல்வத்த மற்றும் செவனகல சீனி தொழிற்சாலைகளுக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, இத்தொழிற்சாலைகளில் தற்போதுள்ள சுற்றுலா பங்களாக்களை பயன்படுத்தி சுற்றுலாவை மேம்படுத்துவது மற்றும் இலங்கையில் சட்டவிரோத மதுபான பாவனையை குறைப்பதற்கான தீர்வாக, இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சீனியின் பிரதான உப உற்பத்தியான எத்தனோலைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய குறைந்த விலை மற்றும் உயர்தர மதுபானங்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவது குறித்தும் அமைச்சர் ஆராய்ந்தார்.

இதேபோன்று, கரிம உரம் மற்றும் ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு கரிம சீனி உற்பத்தி தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், சீனி உற்பத்தியை விநியோகிப்பதற்கான முறையான விநியோக வலையமைப்பை உருவாக்குவது மற்றும் தொழிலாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்க வேலை சுட்டெண்ணை தயாரிப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

# சிவனொளிபாதமலை செல்லும் வாகனங்கள் திடீர் சோதனை!

கொழும்பு, ஜன.05

சிவனொளிபாதமலை யாத்திரிகர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மற்றும் மஸ்கெலியாவில் இருந்து நல்லதண்ணியை நோக்கிச் செல்லும் பயணிகள் போக்குவரத்து பேருந்துகள் மற்றும் வான்கள் நல்ல தண்ணி [illegible]ரென சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

கிளீன் சிறீலங்கா திட்டத்துடன் இணைந்ததாக இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, வாகனங்களில் பயணிகளுக்கு விபத்து ஏற்படுத்தும் வகையில் ஆபத்தான முறையில் பொருத்தப்பட்டுள்ள உதிரிப் பாகங்களை அகற்றவும், சிக்னல் விளக்குகள், முகப்பு விளக்குகள் உள்ளிட்ட மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தில் வாகனம் ஒன்றை இயக்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள 21 விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
05.01.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், மார்கழி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# தமிழ் அரசுக் கட்சியின் எதிர்காலம்

தமிழ் அரசுக் கட்சியின் தலைமையில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. மாவை சேனாதிராசாவுக்குப் பதிலாக, இடைக்கால தலைவராக சீ.வீ.கே. சிவஞானம் பொறுப்பேற்றிருக்கின்றார். விமர்சனங்களுக்கு அப்பால் வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையான தமிழ் மக்களின் ஆதரவை பெற்றிருக்கும் ஒரு கட்சியென்னும் வகையில், அதன் எதிர்காலம் தொடர்பில் கவனம் கொள்வது அவசியம். மாவை சேனாதிராசாவின் காலத்திலேயே கட்சி பெருமளவுக்கு உட்சிதைவுக்கு உள்ளானது.

இரா.சம்பந்தன் காலத்திலேயே அது ஆரம்பித்துவிட்டாலும் கூட, சம்பந்தன் தமிழ் அரசியலில் தவிர்க்க முடியாத ஒருவராக இருந்தமையும் சம்பந்தனை நிராகரித்து செயல்படக் கூடிய ஆற்றலுடன் கட்சியில் எவரும் இல்லாமையாலும் சம்பந்தனால் கட்சியை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடிந்தது. ஆனால் சம்பந்தன் உடல்நிலையால் கொழும்பில் முடங்கிய காலத்தில், கட்சியை கட்டுக்கோப்புடன் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு மாவை சேனாதிராசாவையே சார்ந்திருந்தது ஆனால், அதனை அவரால் திறம்பட கையாள முடியவில்லை.

தமிழ் அரசு கட்சியின் வளர்ச்சியில் மாவைக்கு ஒரு தவிர்க்க முடியாத இடமுண்டு என்பது எந்தளவுக்கு உண்மையோ அந்தளவுக்கு மாவையினால் கட்சி மோசமான பின்னடைவையும் சந்தித்துவிட்டது என்பதும் உண்மையே! தலைமையில் இருப்பவர் கட்சியிலுள்ளவர்களை கட்டுப்படுத்தும் ஆற்றலை இழந்து போகும்போது கட்சிக்குள் கட்டுப்பாடு இல்லாமல் போய்விடும். தடியெடுத்தவர் எல்லாம் தண்டல்காரர் என்னும் நிலைமை உருவாகும். கடந்த இரண்டு வருடங்களாக தமிழ் அரசுக் கட்சிக்குள் இதுதான் இடம்பெற்றுவருகின்றது.

இந்த நிலைமையை மாற்றியமைக்கும் ஆற்றலுடன் சீ.வீ.கே.சிவஞானம் இருக்கின்றாரா? எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் போது, இந்தப் பொறுப்பை எவ்வாறு நிறைவேற்றப் போகின்றேனோ தெரியவில்லை - எனினும், என்னைப் போலவே நீங்களும் தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய இயக்கம் தேவை என்பதை உணர்ந்திருப்பதால் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றேன் என்னும் கூற்றுடன்தான் தனது முதல் அடியை எடுத்து வைத்தார். இன்று 75 ஆண்டுகளுக்கு பின்னர் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிர்காலம் இருக்குமா என்னும் கேள்வியுடன் கட்சி ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. கடந்த தேர்தலில் எட்டு ஆசனங்களை பெற்றிருந்தாலும் கூட, தமிழ் மக்களின் பழம் பெரும் கட்சியென்னும் அடிப்படையில் கட்சி தோல்வியுற்றிருக்கின்றது என்பதே உண்மையாகும்.


இந்தப் பின்புலத்தில் கட்சியை சரிசெய்யும் பொறுப்பு முற்றிலும் சீ.வீ.கே.சிவஞானத்தை சார்ந்ததாக மாறியிருக்கின்றது. ஒரு காலத்தில் படித்தவர்களின் கட்சியாக நோக்கப்பட்ட தமிழ் அரசு கட்சியின் இன்றைய நிலைமை கவலைக்குரியது. படித்தவர்கள் என்று சட்டத்தரணிகளை நோக்கும் மூடப் பழக்கத்தை இந்தத் தலையங்கம் ஊக்குவிக்கவில்லை ஆனால், தமிழ் மக்களின் சார்பில் நாடாளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு செல்பவர்கள் சில தகுதிகளை கொண்டிருப்பது கட்டாயமானது.

அந்த அடிப்படையில் நோக்கினால் கட்சியின் வட்டாரக் கிளைகளிலிருந்து மாவட்டக் கிளைகள் வரையில் புதியவர்களை உள்வாங்கி முக்கியமாக தமிழர் அரசியலிலிருந்து விலகிச் செல்லும் இளைய தலைமுறையினரை ஈர்க்கும் நோக்கில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இனிவரும் காலத்தில் மாகாண சபையை நோக்கிய நகர்வுகள் இடம்பெறும். மத்தியை விடவும் மாகாணமே பொருளாதார திட்டங்களில் முன்னுரிமைய பெறும். குறிப்பாக வடக்கு, கிழக்கில் இந்தியாவின் பெரும் திட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் மாகாண சபைக்கு அனுப்பப்படுவர்கள் திறமையும் ஆளுமையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் - இல்லாவிட்டால் விடயங்களை கையாளமுடியாது. இவ்வாறான விடயங்கள் பலவற்றை கருத்தில் கொண்டு புதிய தலைவர் சிவஞானம் செயல்பட்டால் மட்டுமே, தமிழ் அரசுக் கட்சி முன்னரைப் போல் நிமிர முடியும். இல்லாவிட்டால் சில ஆசனங்களோடு தேய்ந்து போகும் நிலைமையே ஏற்படும்.

எக்னெலிகொட விவகாரம்

# தற்போதைய அரசிடம் நீதியை கோருகிறேன்!



கொழும்பு, ஜன. 05

சுயாதீன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட வலிந்து காணாமலாக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் மற்றும் தற்போதைய நீதிமன்ற செயன்முறை ஆகியவற்றின் மீது தனக்கு முழுமையான நம்பிக்கை இருப்பதாகவும், எனவே தற்போதைய அரசாங்கத்தின்மீது நம்பிக்கை வைத்து, விரைவாக நீதியை நிலைநாட்டுமாறு கோருவதாகவும் அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்தார்.

சுயாதீன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டமை குறித்த நீதிமன்ற வழக்கு விசாரணைகள் இன்னமும் நிறைவடையாத நிலையில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய வின் உத்தரவுக்கு அமைவாக பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டதாக தன்னை முன்னாள் கடற்படை வீரர் என அடையாளப்படுத்தும் ஆர்.பி.டி.பி. பிரசன்ன பியசாந்த அண்மையில் 'சுதா கிரியேஷன்ஸ்' எனும் தனியார் யூடியூப் தளத்துக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

இது குறித்து நீண்ட காலமாக நீதியைக்கோரி போராடிவரும் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவிடம் வினவியபோது, அவர் தான் அந்த நேர்காணலைப் பார்வையிடவில்லை என பதிலளித்தார்.

"பிரகீத் எக்னெலிகொட வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடந்த 2015 ஆம் ஆண்டின் பின்னர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மிகச்சிறப்பான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அவ்விசாரணைகள் மீது எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறது. அவற்றின் அடிப்படையில் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது.

அவ்வாறிருக்கையில், அவ்வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தி, நீதியை நிலைநாட்டுமாறு அரசாங்கத்திடமும், உரிய அதிகாரிகளிடமும் என்னால் கோரமுடியுமே தவிர வேறு எதனையும் செய்ய முடியாது" என்றும் சந்தியா எக்னெலிகொட தெரிவித்தார்.

அத்தோடு கடந்த காலங்களில் தான் அரசாங்கத்திடமும், நீதிமன்றக்கட்டமைப்பின் ஊடாகவுமே நீதியைக் கோரி வந்திருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், தற்போதைய புதிய அரசாங்கத்தின்மீது நம்பிக்கை வைத்து அவர்களிடமும் நீதியை விரைவாக நிலைநாட்டுமாறு கோருவதாகக் குறிப்பிட்டார். (அ)

## 11 கிலோ தங்கம் கடத்திய மூவர் கைது!

கொழும்பு, ஜன. 05

கற்பிட்டி, பத்தலன்கடுவ தீவுக்கு அப்பாலுள்ள கடற்பகுதியில் 11 கிலோ 300 கிராம் தங்கத்தை கடத்திச் சென்ற மூன்று சந்தேக நபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் பத்தலங்குண்டுவ பகுதிக்கு அண்மையில் உள்ள கடற்பரப்பில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் கற்பிட்டி பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.

சந்தேக நபர்கள் மூவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# புதிய பாதைக்கு நாட்டை நாம் இட்டுச்செல்வோம்!

### கூறுகிறது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜன. 05

நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையிலேயே 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்துள்ளார்.


கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவிலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது பாரிய நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பை வைத்தே இந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். ஆகவே மக்களின் எதிர்பார்ப்புக்களை நாளுக்கு நாள் படிப்படியாக நிறைவேற்றும் நடவடிக்கையையே நாம் முன்னெடுத்துள்ளோம்.

நாட்டை கட்டியெழுப்பும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையிலானதுமான வரவு - செலவுத்திட்டமாகவே 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் அமையப்பெறும். அதனை இலக்காக கொண்டே நாம் வரவு செலவுத்திட்டத்தை தயாரித்துள்ளோம். தேர்தலில் எமக்கு வாக்களித்துள்ள மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கான தீர்வுகளை நாம் நிச்சயம் அவர்களுக்கு வழங்குவோம் - என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனதில் உறுதி வேண்டும்!

- எஸ். ராஜசேகரன்

நீச்சல் அடிக்கத் தெரிந்தவர்கள் ஆற்றுக்குள் போய் வரலாம். ஆனால் வாழ்க்கையில் எதிர்நீச்சல் அடிக்கும் திறன் இருந்தால், வரலாற்றில் கூட இடம் பெறலாம். வாழ்க்கையில் முன்னேற நினைக்கும் மனிதர்களுக்கு, ஊக்கம் என்பது இன்றியமையாததாகும்.

ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் செய்கின்ற எல்லாச் செயல்களும் வெற்றிகரமாக நடைபெறுகிறது. ஆனால் இன்றைய மனிதர்களில் எத்தனையோ பேர், தங்களிடம் தகுதிகளும், திறமைகளும் இருந்தும், ஊக்கமின்மையாலும், தாழ்வு மனப்பான்மையாலும் பின்தங்கி விடுகின்றனர். தாழ்வு மனப்பான்மை என்பது புற்றுநோயை விடக் கொடியதாகும்.

மனிதர்கள் உருவத்தாலும், நிறத்தாலும், படிப்பாலும், பொருளாதாரத்தாலும் தாழ்வு மனப்பான்மை கொண்டு தங்களது தனித்திறமைகளைப் பற்றி தாங்களே குறைத்து மதிப்பிட்டுக் கொள்கிறார்கள். ஒருவர் தன்னைப் பற்றி குறைத்து மதிப்பிட்டுக் கொண்டால் மற்றவர்கள் எவ்வாறு அவரை மதிப்பிடுவார்கள்?

உருவத்திற்கும், செயலுக்கும் தொடர்பு கிடையாது. சிறிய அங்குசம்தான் பெரிய யானையைக் கட்டுப்படுத்துகிறது. சிறிய மெழுகுவர்த்திதான், பெரிய இருளை அகற்றுகிறது . சிறிய உளிதான், பெரிய மலையை உடைக்கப் பயன்படுகிறது.

தங்கம் விலை அதிகம் தான். தகரம் விலை மலிவு தான். ஆனால் தகரத்தைக் கொண்டு செய்ய வேண்டியதை, தங்கத்தைக் கொண்டு செய்ய முடியாது. அதனால் தகரமும் மட்டமில்லை, தங்கமும் உயர்ந்ததில்லை.

நம்மில் பல பேர் படிப்பில் சிறந்தவர்களாக இருக்கலாம் சிலர் விளையாட்டில் திறமைசாலிகளாக இருக்கலாம் சிலர் இசை, நடனம் போன்ற கலைகளில் திறமை உள்ளவர்களாக இருக்கலாம். கண்டிப்பாக ஒவ்வொருவரிடமும் ஏதாவது ஒரு தனித்திறமை ஒளிந்து கொண்டிருக்கும். அதை வெளிக் கொண்டு வருபவர்களுக்குத் தான் இந்த வானமும் வசப்படும்.

சில நபர்கள் தனக்கு மட்டுமே கஷ்டங்களும், சோதனைகளும் இருப்பதாகப் புலம்புகிறார்கள். ஒவ்வொரு நபருக்கும் அவர்களால் சமாளிக்கக் கூடிய அளவிற்கு தான் பிரச்னைகள் வந்து சேரும். இதுவே இயற்கையின் நியதி.

நம்மால் முடியாது என்று நாம் நினைக்கும் விஷயத்தை, இந்த உலகத்தில் வேறு யாரோ செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். எந்தச் செயலையும் செய்வதற்கு தயங்காதீர்கள். அதுபோல எந்தச் செயலையும் தள்ளிப் போடாதீர்கள். திட்டமிட்டு செயல்களைச் செய்யுங்கள். அதோடு மட்டுமில்லாமல், அதனைக் துணிச்சலோடும் செய்யுங்கள். ஏனெனில் துணிந்தவர்களுக்கு என்றுமே தோல்வி இல்லை.

பூட்டுத் தயாரிக்கும் கம்பெனிகளில் , பூட்டு மட்டுமே தயாரிப்பது கிடையாது. பூட்டைத் திறப்பதற்கு சாவியையும் சேர்த்துத் தான் தயாரிக்கிறார்கள். அதுபோலத்தான் பிரச்னைகளும், அதற்கான தீர்வுகளுடனேயே உருவாகின்றன.

எப்போதும் உங்களை மற்றவர்களோடு ஒப்பிடாதீர்கள், அது உங்களுக்கு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும்.

உயரம் குறைவாக உள்ளவர்கள், தங்களது உயரத்தை நினைத்துக் கவலைப்பட வேண்டியது இல்லை. அத்தனை மனிதர்களையும் தலை நிமிர்ந்து பார்த்துப் பேச, நம்மால் மட்டும் தான் முடியும் என்று பெருமைப்பட வேண்டும். நாம் எவ்வளவு உயரம் என்பது முக்கியமல்ல, வாழ்க்கையில் நாம் எவ்வளவு உயர்கிறோம் என்பதுதான் முக்கியம்.

சில மனிதர்கள் மற்றவர்கள் தன்னைப் பாராட்டவில்லை என்றும், வேறு சிலர் தன்னுடைய செயல்பாடுகளை மற்றவர்கள் எப்போதும் குறை சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள் என்றும் கவலைப்படுகின்றனர். அவர்கள் குறை சொல்கிறார்கள் என்று எதிலும் பின்தங்கி விடக்கூடாது. முன்னேறிச் சென்று திரும்பிப் பாருங்கள். அவர்கள் அதே இடத்தில் இருந்து கொண்டு வேறொரு நபரைப் பற்றிக் குறை கூறிக் கொண்டிருப்பார்கள். நமது முதுகுக்குப் பின்னால் குறை சொல்பவர்களைக் கண்டு நாம் கவலைப்படக் கூடாது. அவர்களை விட இரண்டு அடி தூரம் நாம் முன்னால் தான் இருக்கிறோம் என்று நினைத்து பெருமைப்பட வேண்டும்.

பொதுவாகவே வளரும் வரையில் காதுகளை மூடிக் கொள்ள வேண்டும் வளர்ந்த பிறகு வாயை மூடிக் கொள்ள வேண்டும். வளர்ச்சி என்பது, நீங்கள் நேற்று இருந்த நிலையை விட , இன்று இருக்கும் நிலை உயர்ந்து இருப்பது தான். அதுதான் உங்கள் வெற்றி.

உங்கள் உடல் மொழி உங்கள் தன்னம்பிக்கையை வெளிப்படுத்தக் கூடியது என்பதால், எப்போதும் நிமிர்ந்து நின்று பேசுங்கள். நேருக்கு நேராக கண்களைப் பார்த்து புன்சிரிப்புடன் பேசுங்கள்.

செய்ய வேண்டிய செயல்களைச் சரியான நேரத்தில் செய்து முடியுங்கள். தவறாகச் செய்துவிட்டு, அதற்காக வருத்தம் தெரிவிப்பதை விட, அதனைத் திட்டமிட்டு முன் கூட்டியே சிறப்பாகச் செய்து முடித்தால்தான், மற்றவர்கள் உங்களை உயர்வாகப் பார்ப்பார்கள்.

இந்த செயல் என்னால் முடியாது , கடினமாக உள்ளது என்ற எதிர்மறையான வார்த்தைகளை எப்போதும் பயன்படுத்தாதீர்கள். அப்படிப்பட்ட எண்ணங்களையும் வளர்த்துக் கொள்ளாதீர்கள். அடைவது மட்டுமே, வாழ்க்கை அல்ல, இழப்பதும் தான். துளிர்ப்பது போலவே இலைகளும், மலர்களும் உதிர்வதும்கூட, தாவர வர்க்கத்தில் ஒரு பரிணாம வளர்ச்சியே.

உங்களுக்கான இலக்குகளை நீங்களே முடிவு செய்யுங்கள். அதற்கான பயணத்தை இன்றே தொடங்குங்கள். கை கொடுப்பவர்களுக்கு நன்றி சொல்லுங்கள். தட்டி விடுபவர்களைப் பார்த்து புன்னகை செய்யுங்கள். இயக்கமே இதயத் துடிப்பென நினைவில் கொள்ளுங்கள். மாற்றம் வேண்டினும், ஏற்றம் வேண்டினும், உங்களில் இருந்தே தொடங்குங்கள். உங்களை நீங்கள் சரி செய்து கொண்டே வாருங்கள். உலகம் ஒருநாள் உங்களைப் போல வாழ ஆசைப்படும். உலகம் ஒரு நாள் உங்களை உதாரணமாக எடுத்துக் கொள்ளும். உலகம் ஒரு நாள் உங்களைப் பாடமாக ஏற்கும். ஒரு நாள் உலகம் உங்கள் வழி நடக்கும்.

## இந்தவார ராசிபலன் 05.01.2025 - 11.01.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - மார்கழி 21
நல்ல நேரம்: 09.31 - 11.01 ராகு காலம் : 05.01 - 06.03 திதி : சஷ்டி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் மகிழ்ச்சி மிக்க வாரம். விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள். நல்ல யோக பலன்களை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தடையின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திசையை நோக்கிச் செல்லும். கவர்ச்சிகரமான ஆடம்பரப் பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவருவர்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பார்கள். உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இராது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். உயர்ரக ஆடை ஆபரணங்கள் மற்றும் விரும்பிய பொருட்களெல்லாம் வீடு வந்து சேரும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் பலவழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும். செல்வ நிலையும் உயரும். கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தைத் தரும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் கையில் பணமும் மனதில் மகிழ்ச்சியும் பொங்கி வழியும். எதையும் சாதிக்கும் திறன், நினைத்ததை நினைத்தபடியே முடிக்கும் முனைப்பும் உங்களுக்கு வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தைத் தரும். நல்ல நண்பர்கள் அமைவர். மதிப்பும் மரியாதையும் கூடும். பணியில் உள்ளவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டால், பதவி உயர்வுகள் தேடி வரும். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரணையால், குழப்பங்கள் நீங்கி குதூகலம் உருவாகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் மனதுக்கு மிகவும் பிடித்தமான பழைய உறவுகளின் வரவு இதயக் கோட்டையில், தென்றல் வீசும். மணமேடை ஏறும் மங்கல நாளும் வந்து, மனதில் மகிழ்ச்சி மலர்கள் பூக்கும். சிலர் வீட்டில் அள்ளி அணைத்திடவே பிள்ளைச் செல்வம், துள்ளி விளையாடும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலைகள் மாறி வேகம் பிறக்கும். அதன் காரணமாக இலாபமும் அதிகரிக்கும். வீண் அலைச்சல்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உழைப்பு அதிகமாகி அதற்கேற்றார் போல் ஆதாயமும் அதிகரிக்கும். ஒத்துச் செல்வது நல்லது.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் மூலம் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் ஏற்படும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு இலாபம் அதிகரிக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் பொருளாதார நிலையும் சீராகும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலும் ஆட்சிமுறையும் புதுவருடத்தில் எவ்வாறு இருக்கப்போகிறது?



வீரகத்தி தனபாலசிங்கம்

2024 ஆண்டுக்கு நாம் பிரியாவிடை கொடுத்தபோது ஜனாதிபதி பதவியில் அநுரா குமார திசாநாயக்க நூறு நாட்களை நிறைவு செய்தார். புதிய பாராளுமன்றம் கூடிய பிறகு நாற்பது நாட்கள் கடந்திருந்தன.

கடந்த வருடத்தில் இலங்கை அதன் அரசியல் வரலாற்றில் முக்கியமான திருப்பு முனைகளைக் கண்டது. தெற்காசியாவில் நேபாளத்துக்கு அடுத்ததாக ஆயுதக் கிளர்ச்சியை நடத்திய அரசியல் இயக்கம் ஒன்று ஜனநாயக தேர்தல்கள் மூலமாக ஆட்சியதிகாரத்துக்கு வந்த இரண்டாவது நாடாக இலங்கை விளங்குகிறது. இதுகாலவரை இலங்கையை ஆட்சி செய்த பாரம்பரியமான அதிகார வர்க்கத்துக்கு வெளியில் உள்ள மிகவும் எளிமையான குடும்பப் பின்னணியைக் கொண்ட ஒருவர் நாட்டின் அதியுயர் பதவிக்கு மக்களால் தெரிவானார். முதற்தடவையாக இடதுசாரிக்கட்சி ஒன்று எமது நாட்டில் ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்கிறது.

1980 களின் பிற்பகுதியில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் அரசாங்கம் ஜனதா விமுக்தி.பெரமுன (ஜே.வி.பி.) கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது தனது உயிரைக் காப்பாற்றுவதற்காக தலைமறைவாகச் செல்லவேண்டியிருந்த ஒருவர் 35 வருடங்களுக்கு பிறகு அதே பிரேமதாசவின் மகனை தோற்கடித்து நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக, அரச தலைவராக, அரசாங்க தலைவராக, முப்படைகளினதும் பிரதம தளபதியாக வந்திருக்கிறார் என்று அரசியல் ஆய்வாளர் ஒருவர் கடந்த வாரம் தெரிவித்திருந்த கருத்து கவனத்தை ஈர்த்தது.


ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத சாதனைகளைப் படைத்தது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரான நான்கரை தசாப்தங்களுக்கு அதிகமான காலப்பகுதியில் முதற்தடவையாக பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றிய கட்சியாக தேசிய மக்கள் சக்தி விளங்குகிறது.

ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் திசாநாயக்க கட்டாயமான ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறவில்லை. இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் ஐம்பது சதவீத வாக்குகளைப் பெறாமல் ஜனாதிபதியாக பதவியேற்ற முதல் அரசியல்வாதி என்ற புதிரான பெருமையையும் திசாநாயக்க தனதாக்கிக் கொண்டார்.

ஜனாதிபதியாக கடந்த செப்டெம்பர் பிற்பகுதியில் பதவியேற்ற பிறகு திசாநாயக்க தனது அரசாங்கத்திடம் நாட்டு மக்கள் மிகப்பெரிய எதிர்பார்ப்புக்களை கொண்டிருக்கிறார்கள் என்பதை தெளிவாக உணர்ந்தவராக அதிசயங்களை நிகழ்த்துவதற்கு தான் ஒன்றும் மந்திரவாதி இல்லை என்று கூறினார். பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களின்போது ஜனாதிபதி மாத்திரமல்ல, தேசிய மக்கள் சக்தியின் வேறு முக்கிய தலைவர்களும் கூட மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தருமாறு மக்களிடம் தாங்கள் கேட்கவில்லை என்று கூறினார்கள். ஆனால், தேசிய மக்கள் சக்தியிடம் அதிசயங்களை எதிர்பார்த்தவர்களாக நாட்டு மக்கள் அமோக ஆதரவை வழங்கி அதன் தலைவர்களே பிரமிக்கத்தக்க வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்கள்.

வடக்கு,தெற்கு, கிழக்கு, மேற்கு என்று எந்த வேறுபாடும் இன்றி சகல மாகாணங்களிலும் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற தேர்தலில் பெற்ற வெற்றியும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களில் ஒன்றைத் தவிர ஏனையவற்றில் தேசிய மக்கள் சக்தி கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றியது. பாரம்பரியமாக தமிழ்த் தேசியவாத அரசியலின் கோட்டையாக விளங்கிய யாழ்ப்பாணத்தில் கூட தேசிய மக்கள் சக்தியே கூடுதல் ஆசனங்களைப் பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் மகத்தான வெற்றி குறித்து பல்வேறு வகையான அவதானிப்புகள் இருந்தாலும், தென்னிலங்கையில் என்றாலென்ன, வடக்கு, கிழக்கில் என்றாலென்ன பாரம்பரியமாக ஆதிக்கம் செலுத்திவந்த அரசியல்



கட்சிகள் மீதான மக்களின் கடுமையான வெறுப்பே அதன் வெற்றிக்கு பிரதான காரணமாகும் என்பதில் சந்தேகமில்லை. தென்னிலங்கையில் இன்று பழைய பாரம்பரிய அரசியல் கட்சிகள் தங்களது அரசியல் எதிர்காலத்தில் நம்பிக்கை இழந்து போயிருக்கின்றன. பழைய கட்சிகள் பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களின் போது ஆட்சியமைப்பதற்கு அல்ல, வலுவான எதிர்க்கட்சியாக செயற்படுவதற்கே மக்களிடம் வாக்கு கேட்ட ஒரு பரிதாப நிலையைக் காணக்கூடியதாக இருந்தது.

எதிர்க்கட்சிகளை பொறுத்தவரை, அவை மீண்டும் அரசியலில் தங்களுக்கு ஒரு பொருத்தப்பாட்டை தேடவேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கின்றனவே தவிர, அரசாங்கத்தின் மீது உருப்படியான விமர்சனங்களை முன்வைக்க அவற்றினால் முடியவில்லை. அரசாங்க உறுப்பினர்களின் கல்வித்தகைமைகள் தொடர்பிலான சர்ச்சைகள் போன்ற மக்களுக்கு பெருமளவில் அக்கறையில்லாத விவகாரங்களில் எதிர்க்கட்சிகள் கூடுதல் கவனம் செலுத்துகின்றன.

ஆனரல், அரசியல் ரீதியில் எந்த சவாலைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லாத அளவுக்கு மிகவும் பலம் பொருந்தியதாக விளங்கும் அரசாங்கம் ஆரம்பக்கட்டத்தில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு, அதுவும் குறிப்பாக நூறுக்கும் அதிகமான நாட்கள் செயற்பாடுகளின் அடிப்படையில் அதன் எதிர்காலச் செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்று மதிப்பிடுவது பொருத்தமானதல்ல.

ஆனால், பெரும் எதிர்பார்ப்புக்களுடன் தேசிய மக்கள் சக்தியை ஆட்சிக்கு கொண்டுவந்த மக்கள் உடனடியாக அதனிடமிருந்து பயன்களை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் அவசரப்படுவதில் நியாயமிருக்கிறது. மூன்று வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட முன்னென்றும் இல்லாத வகையிலான பொருளாதார நெருக்கடியின் விளைவாக இன்று நாட்டின் சனத்தொகையில் சுமார் கால்வாசிப்பேர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கிறார்கள். வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கும் என்று எதிர்பார்த்த மக்களுக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது.

கடந்த சில வாரங்களாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்திருக்கின்றன. ஆனால், அதை மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழக்கத் தொடங்கிவிட்டார்கள் என்று வியாக்கியானம் செய்யமுடியாது. ஆனால், பெரும்பாலும் உடனடியாக நடைமுறைப்படுத்த முடியாத பெருவாரியான வாக்குறுதிகளை ஜனாதிபதி தேர்தல் காலங்களில் வழங்கியதனால், அவற்றை நிறைவேற்றுவதில் ஏற்படுகின்ற தாமதத்தின் விளைவான நெருக்கடிகளுக்கு அவர் முகங்கொடுக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

ஆனால், அரசாங்கத்துக்கு குறைந்த பட்சம் ஒரு வருடகால அவகாசத்தை யாவது கொடுக்கவேண்டும். முன்னைய அரசாங்கங்களின் தவறான ஆட்சி முறையின் விளைவாக ஏற்பட்ட பாதகங்களை புதிய அரசாங்கத்தினால் குறுகிய காலத்திற்குள் சீர்செய்துவிட முடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

அதேவேளை, பழைய அரச இயந்திரத்தை வைத்துக்கொண்டு ஆட்சி செய்வதில் உள்ள சிக்கல்களை அரசாங்க தலைவர்கள் வெளிப்படையாகவே ஒத்துக்கொள்வதை காணக்கூடியதாக இருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் கொள்கைத் தீர்மானங்களுக்கு இசைவான முறையில் அரச உயர்மட்ட அதிகாரிகள் செயற்படத் தயங்குகிறார்கள் என்றும் கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரமே அவர்கள் இன்னமும் செயற்படுகிறார்கள் என்றும் அமைச்சர்கள் பகிரங்கமாக குற்றஞ்சாட்டுகிறார்கள்.

முன்னர் மக்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதற்காக வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்திய தாங்கள் இப்போது அரச உயர்மட்ட அதிகாரிகளுக்கு எதிராக வீதியில் இறங்க வேண்டிய நிலைமை தோன்றியிருக்கிறது என்று அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி கடந்த வாரம் கூறியது கவனிக்கத்தக்கது.

ராஜபக்சாக்களின் தவறான ஆட்சி முறைக்கு எதிராக தொடங்கிய "அறகலய" மக்கள் கிளர்ச்சி "படிப்படியாக அரசியல் அதிகார வர்க்கம் முழுமைக்கும் எதிரான ஒரு அமைதிவழி அரசியல் புரட்சியின் வடிவத்தை எடுத்தது. முறைமை மாற்றத்தையும் புதிய அரசியல் கலாசாரத்தையும் வேண்டிநின்ற அந்த கிளர்ச்சியின் சுலோகங்களை முன்னிலைப்படுத்தி தனது அரசியல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்திய தேசிய மக்கள் சக்தி இறுதியில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது.

ஆனால், பாரம்பரியமான அரசியல் அதிகார வர்க்கத்துக்கு பல தசாப்தங்களாக சேவை செய்த அரசு இயந்திரத்தை பயன்படுத்தி முறைமை மாற்றத்தையோ அல்லது புதிய அரசியல் கலாசாரத்தையோ கொண்டுவருவதில் உள்ள சிக்கல்களை இப்போது தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பார்கள். அரச உயர்மட்ட அதிகாரிகளுக்கு எதிரான அவர்களின் குற்றச்சாட்டுக்கள் அதன் வெளிப்பாடேயாகும்.

மக்கள் கிளர்ச்சிக்கு பின்னர் தோன்றிய அரசியல் சூழ்நிலைகளில் ஆட்சிக்கு வருபவர்கள் எவராக இருந்தாலும், மக்களின் கடுமையான கண்காணிப்பின் கீழ்தான் அரசாங்கத்தை நடத்த வேண்டியிருக்கிறது. எதிர்க்கட்சிகள் மெத்தனமாக நடந்து கொண்டாலும் கூட, மக்கள் ஆட்சியாளர்களின் நடத்தைகள் குறித்து விழிப்புடையவர்களாக இருக்கிறார்கள். அதனால் தேசிய மக்கள் சக்தி மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியிருக்கிறது.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் நீண்ட தாமதத்தை காட்டினால் அதை மக்கள் அனுமதிக்கப் போவதில்லை. முன்னைய அரசாங்கங்கள் பெறுப்புக்கூறாமல் நடந்துகொண்டதன் விளைவுகளை மக்களுக்கு இடையறாது சுட்டிக்காட்டிய வண்ணம் ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி பொறுப்புக்கூறுவதில் அதற்கு இருக்கும் கடப்பாடு தொடர்பில் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியிருக்கும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடனும் வழிகாட்டலுடனும் முன்னெடுத்த பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளையே ஜனாதிபதி திசாநாயக்கவின் அரசாங்கமும் தொடர்ந்து பின்பற்றுகிறது. அது குறித்து விக்கிரமசிங்க உள்நாட்டில் மாத்திரமல்ல, இந்தியாவிலும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மக்களுக்கு பாதகமாக அமைந்த நிபந்தனைகள் குறித்து சர்வேதச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாக திசாநாயக்க தேர்தல் காலங்களில் கூறியிருந்தாலும், அது விடயத்தில் அவரால் உருப்படியாக எதையும் செய்யமுடியவில்லை. முன்னைய அரசாங்கம் முன்னெடுத்த பொருளாதாரக் கொள்கைகளை தொடர்ந்து கடைப்பிடிப்பதை தவிர தற்போதைய சூழ்நிலையில் தனக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை என்று ஜனாதிபதி கூறுகிறார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீட்சி தொடங்கிவிட்டது



கலாநிதி ஜெகான் பெரேரா

கிறிஸ்மஸ் பிறந்த நள்ளிரவில் கொழும்பிலும் குறிப்பாக வசதி படைத்த உயர்வர்த்தக பகுதிகளிலும் தொடங்கிய ஜொலிப்பு புத்தாண்டு பிறப்பையும் கடந்து தொடருகிறது. தலைநகரின் இந்த இரவு வெளிச்சத்தில் மூன்று வருடங்களுக்கு முன்னர் அது படுமோசமான பொருளாதார வீழ்ச்சியை கண்டது என்பதற்கான எந்த அறிகுறியையும் காணமுடியவில்லை.

அரசாங்கத்தை பதவி கவிழ்த்து ஜனாதிபதியை நாட்டைவிட்டு தப்பியோட வைத்த "அறகலய" போராட்டத்தின் குவிமையமாக அன்று விளங்கிய கொழும்பு கோட்டை காலிமுகத்திடல் புத்தாண்டு கொண்டாட்டங்களின் மையமாக மாறியது. அந்த மையத்தை நோக்கி ய வீதிகளின் வாகன நெரிசல் அன்று எரிபொருட்களை பெறுவதற்காக பெட்ரோல் விற்பனை நிலையங்களுக்கு வெளியே காணப்பட்ட நீண்ட வரிசைகளை கிரகணம் செய்துவிட்டது.


தலைநகரின் ஆடம்பரமான பகுதிகளில் ஹோட்டல்களும் இரவுவிடுதிகளும் நிரம்பிவழிந்தன. இந்த கொண்டாட்டங்களுக்கான செலவு மிகப்பெரியது. ஆனால், அங்கெல்லாம் கூடிய பெருமளவானோரினால் குறைந்தபட்சம் எப்போதாவது ஒரு தடவையாவது அவ்வாறு செலவழிக்கக்கூடியதாக இருக்கிறது. நீர்நிலைகளை நோக்கி அமைந்திருக்கும் ஐ.ரி.சி. ரத்னதீப மற்றும் சிறாறி ஓஃவ் ட்றீம் போன்ற புதிய ஹோட்டல்கள் இரவில் துபாயில் காணக்கூடிய தோற்றத்தை கொழும்பில் தோற்றுவிக்கின்றன.

தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் பங்குச்சந்தை நாட்டின் பொருளாதார முகாமைத்துவத்தில் புதிய நம்பிக்கை ஏற்பட்டிருப்பதற்கான சான்றாகும். அரசியல் உறுதிப்பாட்டை உணரக்கூடியதாக இருக்கிறது. அந்த உறுதிப்பாடு பாராளுமன்றத்தில் அரசாங்கம் அனுபவிக்கின்ற மூன்றில் இரண்டு பெரும்பானமை பலத்தில் இருந்து மாத்திரமல்ல, அரசாங்கத்தினால் பின்பற்றப்படுகின்ற கொள்கைகளில் இருந்து குறிப்பிடத்தக்க அளவுக்கு வேறுபட்ட யோசனைகளை முன்வைப்பதில் அல்லது முன்மொழிவுகளை செய்வதில் எதிர்க்கட்சிக்கு இருக்கும் இயலாமையில் இருந்தும் வருகிறது.

கொண்டாட்டங்களில் மக்களுக்கு இருக்கும் ஆர்வத்தை பல்வேறுபட்ட மட்டங்களில் அவர்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்பதில் இருந்து காணக்கூடியதாக இருக்கிறது. ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் விலையுயர்ந்த உணவு வகைகளையும் நடமாடும் உணவகங்கள் இயங்கும் காலி முகத்திடல் திறந்த வெளியில் உணவுகளையும் மக்கள் சுவைத்து மகிழ்கிறார்கள். பிரமாண்டமான கடைத்தொகுதிகளில் பீசா ஹட்டில் உணவருந்துகிறார்கள். பொருட்களை உடனடியாக கொள்வனவு செய்யாவிட்டாலும் அவற்றை பார்வையிடுவதற்காக குடும்பம் குடும்பமாக கடைத் தொகுதிகளுக்கு மக்கள் வந்து போகிறார்கள்.

இந்த செலவினங்களை மக்களின் வருமானத்துடன் ஒப்பிடும்போது மிகவும் உயர்ந்தவையாக இருக்கிறது. வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு அரசாங்கம் பெரும் போராட்டதை நடத்துகின்ற போதிலும் வெற்றியைக் காணமுடியாமல் இருக்கிறது. "அரிசி மாஃபியா" வுடனான அரசாங்கத்தின் தற்போதைய சண்டையில் அரசி இறக்குமதிக்கு பிறகு சாதகமான விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. மூன்று வருடங்களுக்கு முன்னர் மூன்று மடங்காக அதிகரித்த பெருவாரியான பொருட்களின் விலைகள் இன்னமும் இறங்கி வராத நிலையில் அதனுடன் சேர்த்து தேங்காயின் விலையும் உயர்ந்து விட்டது.

கொழும்புக்கு வெளியே கிறிஸமஸ் மற்றும் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் பெருமளவுக்கு மந்தமானவையாகவே காணப்பட்டன. கிறிஸ்தவ தேவாலயங்களே அதில் கவனத்தைச் செலுத்தின. கொழும்புக்கு வெளியே பெரிய கொண்டாட்டங்களை பாரம்பரியமான சிங்கள - தமிழ்ப் புத்தாண்டின் போதே வழமையாகக் காணலாம்.



யாழ்ப்பாணம் போன்ற சில மாகாண தலைநகரங்களில் அவற்றுக்கே உரித்தான பண்டிகை விளக்குகளையும் அலங்காரங்களையும் கொண்டிருந்தன. ஆனால், கொழும்பின் அளவுடன் அவற்றை எந்த விதத்திலும் ஒப்பட முடியாது. தேசியத் தலைநகரான கொழும்பின் கொள்வனவுச் சக்திக்கும் மாகாண தலைநகரங்களின் கொள்வனவுச் சக்திக்கும் இடையிலான வேறுபாடு இந்த ஏற்றத்தாழ்வை பிரதிபலித்தது.

தலைநகர பிராந்தியத்தில் மாத்திரமல்ல, நாடுபூராவும் ஒப்புரவான அபிவிருத்தி அவசியம் என்பது அதிகாரப் பரவலாக்கத்துக்காக முன்வைக்கப்படும் முக்கியமான நியாப்பாடுகளில் ஒன்று. அதிகாரத்தில் உள்ளவர்கள் தங்களுக்கும் தாங்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கும் பயன்தரக்கூடியதாக தீர்மானங்களை எடுப்பதில் நாட்டம் காட்டினால் அதிகாரமும் செல்வமும் ஒன்றாக சேர்ந்தே செல்லும்.

அபிவிருத்தியின் பயன்கள் கூடுதலான அளவுக்கு பரந்தளவில் விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக மாகாணத் தலைநகரங்களுக்கு அபிவிருத்தியின் இயந்திரங்களை வழங்குவதே மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கத்தின் நோக்கமாகும். அதிகாரப் பரவலாக்கத்தின் இந்த அம்சத்தை பொதுமக்களுக்கு விளக்கிக்கூற வேண்டியது அவசியமாகும். ஏனென்றால் அவர்களில் பெரும்பான்மையானவர்கள் அதிகாரப் பரவலாக்கம் என்பதை இன நெருக்கடியை தீர்ப்பதற்காக வெளிநாடுகளினால் திணிக்கப்படுகின்ற ஒரு கோட்பாடாக பார்க்கிறார்கள். மத்தியமய ஆட்சி நடைமுறைச் சாத்திய மற்றதாக இருந்ததன் விளைவாக இலங்கையில் மன்னர்கள் காலத்தில் இருந்தே பரவலாக்கம் செய்யப்பட்ட ஆட்சி முறைமை நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது.

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் இனநெருக்கடிக்கு தீர்வுகாண்பதன் பின்னணியிலேயே நோக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், அதை தற்போதைய அரசாங்கத்தை அதிகாரத்துக்கு கொண்டு வருவதற்கான சூழ்நிலையை உருவாக்கிய "அறகலய" போராட்டத்தின் பிரதான சுலோகமாக அமைந்திருந்த "முறைமை மாற்றத்துக்கு" பொருத்தமாக அமையக்கூடிய பரந்த நோக்கு ஒன்றின் அடிப்படையிலும் நியாயப்படுத்த முடியும்.

1987 ஆம் ஆண்டில் இனப்போரின் உச்சக்கட்டத்தில் இந்தியாவின் தலையீட்டையடுத்து இலங்கை அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தத்தின் ஊடாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதே தற்போதைய அதிகாரப்பரவலாக்கல் முறைமையாகும். அதனால் 13 வது திருத்தத்தின் கீழான அதிகாரப்பரவலாக்கம் நாட்டின் இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது என்ற அடிப்படையில் நோக்கப்படுவது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

புதிய அரசாங்கம் கடந்த காலத்தின் நல்லதை மாத்திரமல்ல, கெட்டதையும் கையேற்க வேண்டியிருந்த போதிலும், எதிர்காலத்தைகக் கட்டியெழுப்ப அவற்றில் இருந்து நல்லதை மாத்திரமே எடுத்துக் கொள்கிறது. இது எதிர்காலத்துக்கான நம்பிக்கையைத் தருகிறது.



நடைமுறைப்படுத்தலை அதை சட்டத்திற்குள் கொண்டுவந்த அரசாங்கம் உட்பட சகல அரசாங்கங்களுமே எதிர்த்து வந்திருக்கின்றன. தற்போதைய அரசாங்கம் தற்போது நிலவுகின்ற சூழ்நிலையின் வேறுபட்ட அடிப்படையில் புதிய அரசியலமைப்பு ஒன்றின் ஊடாக அதிகாரத்தை பரவலாக்குவற்கு தற்போதைய அரசாங்கம் வெளிப்படுத்தியிருக்கும் உறுதிப்பாட்டுக்கு அதுவே காரணமாக இருக்கலாம்.

சர்வதேச நிதி நிறுவனங்களின் எதிர்வு கூறல்களையும் விட உயர்வானதாக இந்த வருடம் 4 சதவீதத்தினால் வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படும் பொருளாதாரத்தின் முன்னேற்றம் அரசியல் சமுதாயத்தில் காணப்படும் உறுதிப்பாட்டின் விளைவானதாக அமையும். அந்த உறுதிப்பாடு முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரிப்பில் பிரதிபலிக்கிறது. இந்த நேர்மறையான வளர்ச்சிக் காரணிக்கு ஊழலற்ற ஆட்சிமுறை மீதான அரசாங்கத்தின் உறுதிமொழி உதவியாக அமையும்.

கடந்த காலங்களைப் போலன்றி, புதிய அரசாங்கத்தின் முதல் 100 நாட்களில் அரசாங்கத் தலைவர்கள் சம்பந்தப்பட்ட எந்தவொரு பெரிய ஊழலும் இடம்பெறவில்லை. அண்மைய கடந்த கால நடைமுறைகளுடன் ஒப்பிடும் போது பாராளுமன்ற புதியதொரு சபாநாயகரை பதவி விலகவைத்த கலாநிதிப்பட்ட பிரச்சினை புதிய ஒரு நடைமுறையாக இருக்கிறது. நாட்டின் நற்பெயருக்கும் பொருளாதாரத்துக்கும் பாதகமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கண்டுபிடிக்கப்பட்ட வர்கள் தாங்களாக பதவி விலகவில்லை என்பது மாத்திரமல்ல பதவி விலகுமாறு கேட்கப்பட்டதுமில்லை.

ஜனாதிபதியிடமும் அவரின் உயர் மட்ட குழுவினரிடமும் காணக்கூடியதாக இருக்கின்ற பகட்டு ஆரவாரமில்லாத - ஆடம்பரமில்லாத - ஊழலலற்ற மனப்பான்மையும் நடத்தைகளும் அடிமட்டம் வரை சுவறிச் செல்கின்றது போன்று தோன்றுகிறது. வதிவிடம் தொடர்பாக கிராம உத்தியோகத்தரின் சாட்சிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்காக விடுமுறை நாட்களில் உள்ளூராட்சி அலுவலகம் ஒன்றுக்கு சென்றபோது இதை உணரக்கூடியதாக இருந்தது. கடமையில் இருந்த அதிகாரி எந்தவிதமான தாமதமோ அல்லது அமளியோ இல்லாமல் விண்ணப்ப நடைமுறைகளைப் பற்றி கூறியதுடன் தேவையான ஆவணத்தை தந்தார்.

சம்பந்தப்பட்டவர் தனது முன்னிலையிலேயே கையழுத்திடுவதை உறுதிப்படுத்துவது உட்பட சகல விதமான நடைமுறைகளையும் தான் பின்பற்றுவதாக அவர் விளக்கமளித்தார். தனது மேலதிகாரி ஆவணத்தை பரிசோதிக்க வேண்டும் என்பதையும் அவர் கூறினார். அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் காணப்படும் நடத்தை மாற்றம் கடமைகளைச் செய்வதில் அடிமட்டம் வரை பின்பற்றப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

தனது பகுதியில் பல இனத்தவர்களும் பல மதத்தவர்களும் வாழ்கின்றனர் என்பதையும் அவர் கூறினார். எனக்கு முன்னதாக, கடந்த இருபது வருடங்களாக வெளிநாட்டில் வாழ்ந்துவரும் புலம்பெயர் சமூகத்தைச் சேர்ந்த இரட்டைக் குடியுரிமை கொண்ட ஒருவர் தேசிய அடையாள அட்டை ஒன்றைப் பெறுவதற்கு வந்ததாகவும் அவரிடம் தேவையான சகல ஆவணங்களும் இருந்ததால் அவரை முன்னர் அறிந்திருக்காத போதிலும் தேவையான பத்திரத்தை கொடுத்ததாகவும் அவர் ஒரு குடிமகன் என்பதால் சமத்துவமாக நடத்துவது முக்கியம்னது என்றும் கூறினார்.

இதுவும் புதிய அரசாங்கத்திடம் காணக்கூடியதாக இருக்கும் நடத்தை மாற்றத்தின் நேர்மறையான செல்வாக்கின் ஒரு பகுதியா என்று கேட்டபோது இல்லை இது தான் நல்லாட்சி அரசாங்க காலத்தில் பெற்றுக்கொண்ட செய்தி என்று அவரிடமிருந்து பதில் வந்தது. புதிய அரசாங்கம் கடந்த காலத்தின் நல்லதை மாத்திரமல்ல, கெட்டதையும் கையேற்க வேண்டியிருந்த போதிலும், எதிர்காலத்தைகக் கட்டியெழுப்ப அவற்றில் இருந்து நல்லதை மாத்திரமே எடுத்துக் கொள்கிறது. இது எதிர்காலத்துக்கான நம்பிக்கையைத் தருகிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர தலைவரும் செயலாளரும் இல்லாத தமிழரசுக் கட்சிக்கு இரண்டு பேச்சாளர்கள் ஏன்?

**பனங்காட்டான்**

இந்த வருட மார்ச் மாத இறுதியில் சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் தேர்தல் நடைபெறும் என்பது ஓரளவுக்கு நம்பகமாகவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் இலகுவாக வென்றது போன்று இத்தேர்தலையும் கையகப்படுத்த சூட்டோடு சூடாக அநுர குமார தரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

எதிர்பார்ப்பது வெற்றியளிக்கின், மாகாண சபைகளுக்கான தேர்தலையும் வருட நடுப்பகுதிக்குள் நடத்த ஆலோசிக்கப்படுகிறது. தற்போதுள்ள அதிகாரங்களுடன் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படுமென்று கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அநுர குமார பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

அதாவது, காணி மற்றும் காவற்துறை அதிகாரமில்லாமல் மாகாண சபைகள் இயங்க அனுமதிக்கப்படும் என்பதே இதன் அர்த்தம். கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இவ்வாறே மாகாண சபைகள் இயங்கியதால் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ள தமிழர் தரப்பும் தயாராகிறது. இந்தியாவும் இதனுடன் மகிழ்ச்சிப் பேறடையும்.

அடுத்து, முன்னைய ஆட்சிக் காலங்களில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்கள் பற்றிய விசாரணைகள் இடம்பெறுகின்ற காட்சிகளை ஊடகங்கள் ஊடாக பார்க்க முடிவதை குறிப்பிட வேண்டும். கொலைகள், கொள்ளைகள், பதுக்கல்கள் சம்பந்தமானவை இவை. பிள்ளையான், கருணா ஆகியோர் அழைக்கப்பட்ட விசாரணைக் கட்டுகளின் படிகளில் மகிந்த ராஜபக்சவின் மகனான யோசிதவும் சென்று வந்திருக்கிறார். முன்னாள் அமைச்சரான வியாழேந்திரனின் மட்டக்களப்பு வீட்டுக்கு முன்னால் ஒருவர் மரணமானது தொடர்பாக அமைச்சரின் சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜே.வி.பி.யில் அவதாரமெடுத்து மகிந்த ராஜபக்சவின் அரவணைப்பில் வளர்ந்து, கோதபாயவை ஆட்சிபீடத்திலேற்றி, பின்னர் அவரிடமிருந்து பிரிந்து சென்று அரசியலில் சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் விமல் வீரவன்சவும் கடந்த வாரம் அதே விசாரணைக் கட்டிடத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். இவர் மீதான குற்ற விசாரணைக்கல்ல. மகிந்தவின் தம்பியும், பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகருமான பசில் ராஜபக்ச மீது இவர் சுமத்தி வந்த குற்றச்சாட்டுகள் பற்றிய மேலதிக தகவல்களைப் பெறும் விசாரணைக்கே இந்த அழைப்பு.

முன்னாள் நிதியமைச்சரான, அமெரிக்க இரட்டைப் பிரஜாவுரிமை பெற்ற பசில் அமெரிக்காவில் சொத்துகளை சேர்த்து வைத்திருப்பதைப் பற்றிய விசாரணைகளை அரசு ஆரம்பித்தால் முழுத்தகவல்களையும் தம்மால் தரமுடியுமென விமல் வீரவன்ச இங்கு தெரிவித்துள்ளார். அவர் எதிர்பார்ப்பது போல் விசாரணை தொடருமானால் மகிந்த - கோதபாய - நாமல் உட்பட பலருக்கு நெருக்கடி ஏற்பட இடமுண்டு. இதற்கான வெகுமதியாக, விமல் வீரவன்ச மீதான விசாரணைகளை அநுர குமார அரசு மறைத்துவிடக்கூடும். என்ன இருந்தாலும் விமல் வீரவன்ச ஜே.வி.பி.யின் முன்னாள் தோழரல்லவா? குற்றவியல் வழக்குகளில் எதிரி ஒருவர் முடிக்குரிய சாட்சியாக மாறி புனிதராவது போன்றது இது.

தெற்கின் அரசியல் இவ்வாறு ஜோராக ஓடிக்கொண்டிருக்க தமிழர் தாயகத்தில்











தமிழரின் தலைமைக் கட்சியெனவும், மூத்த அரசியல் அமைப்பெனவும் பெயர் கொண்ட தமிழரசுக் கட்சி எழும்ப முடியாது வீழ்ந்து கொண்டிருக்கிறது. அண்மையில் இடம்பெற்ற பல நிகழ்வுகள் இதன் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் ஒன்றாக்கிப் பார்க்க வைக்கிறது.

தமிழரசுக் கட்சியின் நீண்டகால தலைவராகவிருந்த மாவை சேனாதிராஜாவுக்கு ஒருவாறு முடிவு கட்டப்பட்டுவிட்டது. கட்சியின் அண்மைய போக்குகளில் பெரும் விரக்தி கண்ட இவர், வெறுப்பின் உச்சக் கட்டத்தில் இருந்த போது தமது தலைவர் பதவியைத் துறந்து கடிதம் அனுப்பினார் என்று சொல்லப்படுகிறது. பின்னர் கட்சியினதும், இனத்தினதும் எதிர்காலம் கருதி தமது பதவி விலகலை வாபஸ் பெற்றார்.

மாவையரை எப்போது வெளியே தள்ளலாமென்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு இது நல்ல வாய்ப்பாகிப் போனது. முன்னர் ராஜினாமாவை வாபஸ் பெற முடியாது என்று காரணம் சொல்லி பதவி பறிக்கப்பட்டது. (தமிழரசுக் கட்சியின் எந்த யாப்பில் எத்தனையாவது அத்தியாயத்தில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது என்பது எவருக்கும் தெரியாது).

கட்சியின் மூத்த துணைத் தலைவராகவிருந்த சீ.வீ.கே.சிவஞானம் இப்போது பதில் தலைவராகியுள்ளார். இந்தத் தெரிவு அல்லது நியமனம் நெறிமுறைகளுக்கு உட்பட்டது என்பதால் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதேசமயம், மாவையரை கட்சியின் மூத்த தலைவர் அல்லது பெருந்தலைவர் என்று அழைக்கக்கூடாதென்று தடை வந்துள்ளது. தமிழரசுக் கட்சிக்கு மூத்த தலைவர், பெருந்தலைவர் என்பது புதிதான ஒன்றல்ல. கட்சியின் தலைவர் பதவியில் இல்லாதபோதும் இறக்கும்வரை இரா. சம்பந்தன் இவ்வாறுதான் மரியாதையாக அழைக்கப்பட்டார்.

கட்சியின் யாப்பின்படி மூத்த தலைவர் என்பது பதவிப் பெயரன்று. மதிப்பார்ந்த ஒரு கௌரவப் பெயர். அமெரிக்கா, இலங்கை உட்பட பல நாடுகளில் ஆட்சித் தலைவர்களாகவிருந்த அல்லது கட்சித் தலைவர்களாகவிருந்த ஒருவரை, பின்னைய காலத்தில் முன்னாள் தலைவர் (பாஸ்ட் பிரசிடன்ட்) என்று மரியாதையாக அழைப்பது வழக்கம். அவ்வாறுதான் சம்பந்தனும் அழைக்கப்பட்டார்.

> பெருந்தலைவர், மூத்த தலைவர் என்பது ஒரு பதவியல்ல. ஒருவரது சேவைக்கு மதிப்பளிக்கும் மரியாதைக்குரிய பெயர். அமரரான சம்பந்தன் அவ்வாறு அழைக்கப்பட்டாரென்றால் மாவை சேனாதிராஜாவை அவ்வாறு அழைப்பதில் என்ன தவறு? எழுபத்தைந்தாவது ஆண்டில் தத்தளிக்கும் தமிழரசுக் கட்சிக்கு தலைவரும் பதில், செயலாளரும் பதில். ஆனால், பேச்சாளர் மட்டும் இருவர். தோற்றவர்களுக்காக ஒருவர், வென்றவர்களுக்காக ஒருவரா?

கட்சிக்காகவும், இனத்துக்காகவும் நீண்ட காலம் களமாடிய மாவையரை மூத்த தலைவர் அல்லது பெருந்தலைவர் என்று அழைப்பதால் எந்த இழுக்கும் வந்து விடப்போவதில்லை. அவரை அவமானப்படுத்தியே வீட்டுக்கு அனுப்ப வேண் மென்ற இழிசெயலால் தமிழரசுக் கட்சி தனது எழுபதாவது ஆண்டில் தன்னைச் சிறுமைப்படுத்தியுள்ளது என்றே சொல்ல வேண்டும். இது கட்சிக்குள் ஒட்டகம் என்றும் குருவிச்சை என்றும் விமர்சிக்கப்படும் ஒருவரது செயல் என்பதை ஊடகங்களும் அரசியல் விமர்சகர்களும் தெரிவித்து வருகின்றனர்.

மாவையரை சுமந்திரன் எதற்காக விரோதமாகப் பார்க்கிறாரென்று தமிழரசின் முக்கியமான ஒருவரிடம் வினவிய போது, சில வாரங்களுக்கு முன்னர் சீ.வீ.கே.சிவஞானம் இவர்கள் இருவர் பற்றியும் அளித்த வாக்கியமே அவரது பதிலாக வந்தது. உந்த அறுவானே அந்தப் பிசாசைக் கொண்டு வந்தது என்று சீ.வீ.கே. சொன்னமை மாவையரையும் சுமந்திரனையும் சுட்டியது. மாவையரின் சில வழக்குகளில் சுமந்திரன் அரசியலுக்கு வருவதற்கு முன்னர் ஆஜராகியதாகவும், அதனால் சுமந்திரனை பின்கதவால் (தேசியப் பட்டியல்) எம்.பி. யாக்க சம்பந்தனிடம் மாவையரே சிபாரிசு செய்ததாகவும் தெரிய வருகிறது. மாவையர் தனக்குத்தானே சூனியம் செய்து பரிதவிப்பது தெரிகிறது.

இப்போது கட்சியின் நிலைமையைப் பார்த்தால் அங்கு மூன்று தலைவர்கள் காணப்படுகின்றனர். மாவையர் மூத்த - பெருந்தலைவர். சீ.வீ.கே.சிவஞானம் பதில் தலைவர். கிளிநொச்சி எம்.பி.சிவஞானம் சிறீதரன் சுமந்திரனை தோற்கடித்து முறைப்படி கட்சியின் தலைவராகத் தெரிவாகியும், வழக்கின் முடிவுகளுக்காக காத்திருக்கிறார். பவளவிழா ஆண்டில் கட்சிக்கு இப்படியொரு சோதனை.

கட்சியின் செயலாளர் என்று பார்க்கின் அங்கும் நிரந்தரமாக ஒருவருமில்லை. உதவிச் செயலாளராகவிருந்த ப.சத்தியலிங்கம் பதில் செயலாளராகப் பணியாற்றுகிறார். இவர் முன்னர் வட மாகாண அரசில் அமைச்சராகவிருந்த போது முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் பதவி நீக்கம் செய்யப்பட்டவர். இவரை சுமந்திரனின் றப்பர் ஸ்ராம்ப் என்றே கட்சிக்காரர்கள் சொல்கின்றனர். தேவைப்பட்டால் தமது எம்.பி. பதவியைத் துறந்து சுமந்திரனை தேசியப் பட்டியல் எம்.பி.யாக்க இவர் தயாராகவிருப்பதாக ஊடகங்களில் அவ்வப்போது செய்தி வருகிறது.

சொல்லப்போனால் மாவையரை வெளியேற்றியது, சீ.வீ.கே. சிவஞானத்தை பதில் தலைவராக்கியது, தேர்தல் வேட்பாளரை நியமிப்பது நீக்குவது ஆகிய அதிகாரங்களைக் கொண்ட கட்சியின் செயலாளர் பதவியில் சத்தியலிங்கத்தைப் புகுத்தியது எல்லாமே ஒருவரின் திட்டமிட்ட செயல் என்பது கட்சியின் உறுப்பினர்களால் பகிரங்கமாகச் சொல்லப்படுகிறது.

இது போதாதென்று, கட்சியின் பேச்சாளராக சுமந்திரன் நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டு அவரே அண்மையில் ஊடக சந்திப்பொன்றையும் நடத்தியிருந்தார். இப்பதவி இப்போது வழங்கப்படவில்லையென்றும் ஏற்கனவே இப்பதவியில் அவர் இருந்து வந்ததாகவும் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் சொல்கிறார். கடந்த பொதுத்தேர்தலின் பின்னர் கட்சியின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் தெரிவாகி அப்பதவியை அவர் வகித்துக் கொண்டிருக்கையில், சுமந்திரன் எவ்வாறு கட்சியின் பேச்சாளராகத் தொடர முடியுமென்ற கேள்விக்கு பதிலளிக்க யாரும் இல்லை.

இன்னொரு புறத்தில், தம்மை கட்சியின் பதில் தலைவராக்கியதற்கும் சுமந்திரனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்று கூறும் சீ.வீ.கே. சிவஞானம் தாம் அவரது கட்டுப்பாட்டில் இயங்குபவர் அல்லவென்றும் தெரிவித்துள்ளார். இதனை ஓரளவுக்கு நிரூபிக்கும் வகையில் கடந்த வருட கடைசி நாளான டிசம்பர் 31ஆம் திகதி ஊடகவியலாளர் சந்திப்பொன்றை தனியாக நடத்தி கட்சியின் எதிர்காலத் திட்டத்தை விளக்கியுள்ளார்.

என்னதான் சொன்னாலும், தமிழரசுக் கட்சி பொதுமக்கள் முன்னால் சின்னாபின்னமாகக் காணப்படுகிறது. முழுமையான இயங்கு நிலையில் இல்லாத கட்சிக்கு பெயரளவில் மூன்று தலைவர்கள். அதில் ஒருவர் பதில் தலைவர். நிரந்தரச் செயலாளர் இல்லை. இங்கும் பதில் செயலாளர். தோற்றுப்போனவர்களுக்கு ஒரு பேச்சாளர், வென்றவர்களுக்கு ஒரு பேச்சாளராக இரண்டு பேச்சாளர்கள். இப்படியொரு நிலையில் இலங்கையில் எந்த அரசியல் கட்சியும் இல்லை.

தமிழர்களுக்கு தலைமை தாங்க வேண்டிய தமிழரசுக் கட்சி அதன் எழுபத்தைந்தாவது வயதில் தமிழிழிவுக் கட்சியாக காட்சியளிக்கிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை: பில்லியன் டொலர் கடன் இந்தியா, சீனாவின் செல்வாக்கு

அன்பரசன் எத்திராஜன்



## புதிய ஆண்டில் ஜனாதிபதிக்கு காத்திருக்கும் சவால்கள்!

இலங்கையின் புதிய இடதுசாரி அதிபரும் அவரது கட்சியும் பெற்ற பிரமிக்க வைக்கும் தேர்தல் வெற்றி அந் நாட்டு அரசியல் சூழலை மாற்றியுள்ளன.

ஆனால், இலங்கையில் நிதி நெருக் கடி நிலவும் நிலையில் அந்நாட்டின் புதிய தலைவர்கள், தங்கள் பிரசார வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குக் கடினமான சூழல் நிலவுகிறது.

செப்டம்பரில் நடைபெற்ற ஜனாதி பதி தேர்தலில் அநுரகுமார திஸாநாயக் கவின் குறிப்பிடத்தக்க வெற்றியைத் தொடர்ந்து, நாடாளுமன்றத் தேர்தலில் அவரது தேசிய மக்கள் சக்தி கூட்ட ணிக்கு மகத்தான வெற்றி கிடைத்தது.

ஒரு புதிய ஆண்டு தொடங்கியுள்ள நிலையில், மோசமான பொருளாதார நெருக்கடி மற்றும் பல ஆண்டுகளாக தவ றான ஆட்சியில் இருந்து மீள முயற்சிக் கும் நாட்டுக்கு இது ஒரு திருப்புமுனை யாக இருக்க வேண்டும் என்று அவரும் அவரது ஆதரவாளர்களும் விரும்புகி றார்கள்.

எவ்வாறாயினும், புதிய அரசாங்கத்தி டம் அதிக எதிர்பார்ப்புகளைக் கொண்ட வாக்காளர்களுக்கு, தாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான சூழல், சற்று கடினமாகவே உள்ளது.

கடந்த 2022இல் ஏற்பட்ட நிதி நெருக்கடிக்கு பின்னர், இலங்கையின் பொருளாதார எழுச்சி பலவீனமாகவும் முழுமையற்றதாகவும் உள்ளது.

நவம்பரில், தேசிய மக்கள் சக்தி கூட் டணி 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில்159 இடங்களை வென்றது. மேலும் முன்னெப்போதும் இல்லாத வகையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை அடைந்தது.

இந்த வெற்றி திஸாநாயக்கவுக்கு குறிப்பிடத்தக்க பொருளாதார மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை நடை முறைப்படுத்துவதற்கான வலுவான அதிகாரத்தை வழங்குகிறது.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், சர்வதேச நாணய நிதியக் குழு வுடனான சந்திப்புக்கு புதிய ஜனாதிபதி தயாராக வேண்டியிருந்தது. முந்தைய அரசாங்கம் இலங்கையின் பொரு ளாதாரத்தை உறுதியாக்கும் விதமாக 2.9 பில்லியன் டாலர் நிதித் தொகைப் பெறு வதற்காக, ஐ.எம்.எஃப் உடன் பேச்சு வார்த்தை நடத்தியது.

கடுமையான சிக்கன நடவடிக்கைகள், வரி உயர்வு மற்றும் எரிசக்தி மானியங் களை குறைவாக வழங்குவதற்கு, ஐ.எம். எஃப் ஒப்பந்தம் வழி வகுத்ததால் சர்ச்சைக்குரியதாக மாறியது. மேலும், இது பொதுமக்களின் வாழ்வில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

தேர்தல் பிரசாரத்தின் போது திஸ ாநாயக்கவும் அவரது கூட்டணியும் ஐஎம்எஃப் உடன்படிக்கையின் சில பகுதி களை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்துவதாக உறுதியளித்தனர்.

ஆனால், நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையில், தனது நிலைப் பாட்டை முற்றிலும் மாற்றிக்கொண் டார்.

“பொருளாதாரம் மிகவும் பலவீன மாக உள்ளது, ஒரு சிறிய மாற்றம் கூட பேரழிவை ஏற்படுத்தும். தவறு செய்வ தற்கு எந்த வாய்ப்பையும் வழங்க முடி யாது,” என்று திஸாநாயக்க கூறினார்.

“(ஐஎம்எஃப் கடனின்) விதிமுறைகள் நல்லதா அல்லது கெட்டதா, ஒப்பந்தம் நமக்கு சாதகமாக உள்ளதா, இல்லையா என்பதைப் பற்றி விவாதிக்க இது நேரம் அல்ல. இந்தச் செயல்முறை சுமார் இரண்டு ஆண்டுகள் எடுத்தது, இதனை எங்களால் மீண்டும் தொடங்க முடி யாது” என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த வாக்காளர்களின் அமோகமான தீர்ப்பு, பொருளாதார நெருக்கடியால் தூண்டப் பட்ட மக்கள் எழுச்சியின் விளைவாக பார்க்கப்படுகிறது.

இந்த எழுச்சி, 2022 கோடையில் அப் போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவை வெளியேற்ற வழிவகுத்தது.


மேலும், வெளிநாட்டு நாணயத்தின் கடுமையான பற்றாக்குறையை எதிர் கொண்டபோதும், உணவு மற்றும் எரி பொருள் போன்ற அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய இலங்கை அரசு போராடியது.

சுமார் 46 பில்லியன் டாலர் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில், இலங்கை திவாலானதாக அறிவிக்கப் பட்டது. இலங்கையின் நிதி நெருக் கடியை சமாளிக்க இந்தியா, சீனா, ஜப் பான் போன்ற நாடுகள் பில்லியன் கணக் கான டாலர்களை கடனாக வழங்கியுள் ளன.



பொருளாதார சரிவைக் கையாளத் தவறிய முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிற அரசியல் கட்சிகளின் தலை வர்கள் மீதான மக்களின் கோபத்தையும் சமீபத்திய தேர்தல் முடிவுகள் பிரதி பலிக்கின்றன.

“அதிகமான வரிவிதிப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை வாசி உயர்வு ஏற்படுத்திய நெருக்கடி காரணமாக மக்களுக்கு சில பொருளா தார நிவாரணங்களை வழங்குவதே



திஸாநாயக்கவின் முன்னுரிமைகளில் ஒன்றா கும். கடன் மேலாண்மை மற்றொரு பெரிய சவாலாகும்,” என்று மூத்த அர சியல் ஆய்வாளர் பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட கூறினார்.

குறிப்பிடத்தக்க அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், கொழும்பின் புறநகர் பகுதியில் வசிக்கும் நான்கு பிள் ளைகளின் தாயான நிலுகா தில்ருக்ஷி போன்றவர்கள் இன்னும் போராடி வரு கின்றனர். தினசரி கூலித் தொழிலாளி யான அவரது கணவரும், குடும்பத்தின ரும் அன்றாடம் வாழ்வதற்கு சிரமப்படு கின்றனர்.

ஜனவரி 2022 இல், பெருமளவில் போராட்டம் வெடிப்பதற்கு சில மாதங்க ளுக்கு முன்பு, விலைவாசி உயர்வு பற்றி அவரிடம் பேசியது.

அப்போது, தனது குடும்பத்தினர் மூன்று வேளை சாப்பிடுவதற்கு பதிலாக இரண்டு வேளை மட்டுமே சாப்பிடுவ தாகவும், மீன் மற்றும் இறைச்சியின் விலை அதிகமாக இருப்பதால், தங்கள் குழந்தைகளுக்குக் காய்கறிகள் மற்றும் அரிசி உணவுகளை மட்டுமே வழங்கு வதாகவும் அவர் கூறினார்.

“நாங்கள் வாழ்க்கையைச் சமாளிக்க இன்னும் போராடுகிறோம், எதுவும் மாறவில்லை. முக்கிய உணவான அரிசி யின் விலை மேலும் அதிகரித்துள்ளது. அரசாங்கத்திடமிருந்து எங்களுக்கு எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை” என்று தில்ருக்ஷி கூறுகிறார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைக்க புதிய அரசு உடன டியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இவரைப் போன்ற மக்கள் விரும்புகின்றனர். இலங்கை இறக்கு மதியை சார்ந்த நாடு. உணவு மற்றும் மருந்து போன்ற பொருட்களை இறக்கு மதி செய்ய அதற்கு வெளிநாட்டு நாணயம் தேவைப்படுகிறது.

தற்போது, கொழும்பு தனது கட னைத் திருப்பிச் செலுத்துவதை இடை நிறுத்தி அதன் நாணய இருப்புகளை பராமரிக்கிறது.

அடுத்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் கடனைத் திருப்பிச் செலுத் தத் தொடங்கும்போது உண்மையான போராட்டம் தொடங்கும் என்று நிபு ணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்றால், ஜனாதிபதி திஸாநாயக்க மற் றும் அவரது புதிய அரசாங்கம் பற்றிய மக்களின் பார்வை மாறலாம்.

“மக்கள் அவருக்கு ஒரு மிகப்பெரும் தீர்ப்பை வழங்கியுள்ளனர். சமூக நலத் திட்டங்கள் மூலம் மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்க அவரை அனுமதிப் பதன் மூலம் சர்வதேச நாணய நிதியம் அதற்கு மதிப்பளிக்க வேண்டும்” என்கி றார் பேராசிரியர் உயங்கொட.

திஸாநாயக்க, இலங்கையில் இந்தியா மற்றும் சீனாவின் செல்வாக்கை சம நிலைப்படுத்தும் சவாலை எதிர்கொள்கி றார். இரண்டு நாடுகளும் சமீபத்திய ஆண்டுகளில் இலங்கையில் கணிசமான முதலீடுகளைச் செய்துள்ளன.

“இந்தியாவும் சீனாவும் இலங்கையை தங்கள் செல்வாக்கின் கீழ் கொண்டு வர முயற்சிக்கும். புதிய அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை யாருடனும் இணையாமல் நடைமுறைக்குரியதாகவும் யதார்த்தமானதாகவும் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்,” என்கிறார் பேராசி ரியர் உயங்கொட.

டிசம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் தனது முதல் அதிகாரப்பூர்வ வெளி நாட்டுப் பயணமாக இந்தி யாவை தேர்வு செய்ததன் மூலம் திஸாநாயக்க ஒரு ராஜதந்திர நகர்வை மேற்கொண்டார்.

இந்த பயணத்தின் போது, இலங்கை மின் உற்பத்தி நிலையங்களுக்கு திரவ மாக்கப்பட்ட இயற்கை எரிவா யுவை வழங்குவதற்கும், நீண்ட கால ஆற்றல் சார்ந்த ஒத்துழைப்புக்காக இரு நாடு களின் மின் கட்டமைப்புகளை இணைக் கும் பணிகளை மேற்கொள்வ தாகவும் இந்தியா உறுதியளித்தது.

இலங்கையில் அதிகரித்து வரும் சீனா வின் தாக்கம், குறிப்பாக சீன “ஆராய்ச்சி” கப்பல்கள் இந்தியாவின் தெற்கு முனைக்கு அருகில் உள்ள தீவின் துறை முகங்களுக்கு வருகை தருவது இந்தி யாவுக்குக் கவலை அளித்துள்ளது.


“இந்தியாவின் நலனுக்கு பாதகமான வகையில் எங்களது நிலத்தை எந்த வகை யிலும் பயன்படுத்த அனுமதிக்க மாட் டோம் என்று நான் இந்திய பிரதமரிடம் உறுதியளித்துள்ளேன்,” என்று நரேந்திர மோதியுடனான பேச்சுவார்த்தைக்குப் பின் திஸாநாயக்க கூறினார்.

இந்த உறுதிமொழியால் இந்தியா மகிழ்ச்சியடையும் என்பதில் சந்தேக மில்லை, ஆனால் ஜனவரி மாதத்தின் நடுப்பகுதியில் சீனாவுக்கு பயணம் செய் யும்போது சீனா என்ன எதிர்பார்க்கிறது என்பதை திஸாநாயக்க அறிந்துகொள் வார்.

(பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு நீரும் இரண்டுபடும் தலைவர்களும் மக்களும்



கந்தையா அருந்தவபாலன்

2014 ஆம் ஆண்டிலிருந்து பேசுபொருளாக இருந்துவரும் இரணைமடுவிலிருந்து குடாநாட்டுக்கு குடிதண்ணீர் வழங்கும் விடயஞ்சார்ந்த பிரச்சினைகள் கடந்த ஆறுமாத காலமாதகாலமாக உறங்குநிலையிலே இருந்தது. அதனை சென்ற மாதம் 26 ஆந்திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கேள்வி நாயகனும் அரசியல் விதூசகனுமான நாடாளுமன்ற உறுப்பினர் அரச்சுனா தட்டியெழுப்பியதைத் தொடர்ந்து இப்பிரச்சினை மீண்டும் ஒருமுறை பேசுபொருளாக அரங்கத்துக்குக் கொண்டவரப்பட்டுள்ளது. பிந்திய திட்டமான ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியின் கீழ் முன்மொழியப்பட்டுள்ள கிளிநொச்சி, யாழ்ப்பாணம் குடிநீர் வழங்கல் திட்டம் இன்று பலதரப்பட்ட அரசியல் அபிலாசைகளுடன் இரண்டறக் கலக்கப்பட்டு விட்டமையே இத்திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப் படாமைக்கான பிரதான காரணமாக ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. இதில் கலந்துள்ள அரசியல் என்பது உள்ளூர், தேசிய அரசியல் அபிலாசைகள் மட்டுமன்றி சர்வதேச அரசியலும் புகுந்துள்ளதாக சில விமர்சர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பொதுவாகவே வளரும் நாடுகளுக்கான பெரும்பாலான சர்வதேச உதவிகள் மறைமுகமாக உதவிவழங்கும் நாடுகளின் அரசியல், பொருளாதார நலன்களுடன் தொடர்புபட்டிருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அந்தவகையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடனான இத்திட்டத்துடன் தற்போது உலகில் விரிவடைந்துவரும் நீர் வியாபாரத்துக்கான எதிர்கால உத்தியும் இணைந்துள்ளதாகச் சிலதரப்புகளால் குறிப்பிடப்படுகிறது. எனினும் இதன் உண்மைத்தன்மை ஆய்வுக்குரியதாகும். எனினும் உள்ளூர் மற்றும் தேசிய அரசியல் கலப்பு இப்பிரச்சினையைச் சிக்கலாக்கியுள்ளது என்பதுதான் உண்மை.

பிரச்சினையொன்றின் தீர்வு தொடர்பாகச் சிந்திக்கும் அரசியல்வாதிகளில் பலர் அதன்மூலமான சமூக விளைபயனைவிட தமது எதிர்கால அரசியலுக்கான விளைபயனுக்கு கூடிய முக்கியத்துவம் அளிக்கும்போக்கு அண்மைக்காலத்தில் அதிகரித்துவருவதை அவதானிக்க முடியும். அதனால் பிரச்சினைகளைச் சிக்கலின்றித் தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதைவிடுத்து அதனை மேலும் ஊதிப் பெருப்பித்து அதில் குளிர்காய விரும்புகிறார்கள். இதற்கான அண்மிய உதாரணந்தான் வைத்தியர் அர்ச்சுனா. எதிர்மறையான விடயங்கள் எப்போதும் விரைவாகப் பரவும் வல்லமை கொண்டது மட்டுமல்ல மக்கள் மனங்களில் கூடிய தாக்கத்தையும் ஏற்படுத்த வல்லது. இவ்வகையில்தான் இரணைமடுத் திட்டத்தின் மூலம் குடாநாட்டுக்குக் குடிநீர் வழங்குவது தொடர்பாகப் பல தவறான கருத்தேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இத்தவறான கருத்தேற்றங்கள் கிளிநொச்சி மாவட்ட மக்களிடம் மட்டுமன்றி யாழ்ப்பாண மாவட்ட மக்களிடையேயும் எதரெதிரான வகையில் உருவாக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

கிளிநொச்சி மாவட்ட மக்களிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள தவறான புரிதல்களில் ஒன்று இரணைமடு கிளிநொச்சிக்கு மட்டும் உரித்தானது என்பது. நாட்டின் தேசிய நீர்நிலைகள் அனைத்தும் அரசுக்குரியது என்பதற்கப்பால் இரணைமடுக் குளம் என்பது கிளிநொச்சி மாவட்டத்துடன் மட்டும் வரையறுக்கப்பட்ட தொன்றல்ல. அதன் அமைவிடம் மற்றும் நீரேந்தும் பிரதேசங்கள் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு உரித்தானவை. நீர்ப்பாசனம், வடிகாலமைப்பு, பராமரிப்புப் பணிகளுக்கான நிர்வாகக் கட்டுப்பாடு மட்டுமே கிளிநொச்சிக்குரியது. எனவே இரணைமடுக்குளம் என்பது கிளிநொச்சி மக்களுக்கே சொந்தமானது என்ற தவறான கருத்தேற்றம் களையப்பட வேண்டியதொன்றாகும். குறைந்தது மூன்று மாவட்டங்களையும் கொண்ட வடக்கு மாகாணத்துக்குப் பொதுவானது என்பதையும் கூடியது நாடு முழுமைக்கு மானது என்பதையும் புரிதல் அவசியம். சிறப்பு சட்ட ஏற்பாடு ஒன்றின்மூலம் அரசாங்கம் அதனைக் கையகப்படுத்தி குடாநாட்டுக்கான குடிநீர் வழங்கலைச் செய்யுமாக இருந்தால் அல்லது தேர்தல் மாவட்டம் போன்று நிர்வாக மாவட்டத்தையும் ஒன்றாக்கிவிட்டால் யாரும் ஒன்றும் செய்ய முடியாது. தொல்பொருள், வன ஜீவராசிகள் திணைக்களச் செயற்பாடுகளுக்கு அல்லது மேய்ச்சல்தரைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதுபோல சில எதிர்ப்புகளுடன் எல்லாம் அடங்கிவிடும். அவ்வாறு எதுவும் செய்யாது நம்மை மோதவிட்டு அதில் அரசியல் செய்வதுதான் தெற்கு அரசியல் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இரணைமடு நீரை வழங்காமலும் அதே வேளை குடாநாட்டுக்குக் குடிநீர் வழங்கும் ஏனைய நீர்நிலை வாய்ப்புகளை மேற்கொள்ளாதிருப்பதும் தெற்கின் அரசியல்.



இரண்டாவது தவறான புரிதல் கிளிநொச்சி மாவட்டத்துக்கான நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டதன் பின்னரே குடாநாட்டுக்கான குடிநீரை விடுவிக்க முடியுமென்பது. அருகிலுள்ள நீர்நிலையிலிருந்து தமக்கான தேவைகளையும் நிறைவேற்றவேண்டும் அல்லது முன்னுரிமை அளிக்க வேண்டும் என கிளிநொச்சி மக்கள் கோருவது நியாயமானது. ஆனால் அதன்பின்னர்தான் குடிநீரை விடுவிக்க முடியும் என்பது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றல்ல. நீர்த்தேவைகளை மட்டுமல்ல சமூகத்தின் எந்தவொரு தேவைகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்வதென்பது இயலாததொன்று. அதனால்தான் முன்னுரிமைத் தெரிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொருளியலின் அடிப்படையே இதுதான். தற்போது அரசினால் இறக்குமதி செய்யப்படும் அரிசியை தெற்கு மக்கள் எமக்குத் தேவையான முழு அளவையும் வழங்கியபின்னரே கிளிநொச்சி மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறுவது எப்படித் தவறாகுமோ அதுபோல்தான் இதுவும்.

இன்னொரு தவறான புரிதல் குடாநாட்டுக்குக் குடிநீர் வழங்குவதால் எதிர்காலத்தில் தமது விவசாயத்துக்கு நீர் இல்லாமல் போய்விடும் என கிளிநொச்சி விவசாயிகள் ஐயப்படுதலாகும். குறிப்பாக சிறுபோகத்துக்கான நீர்வழங்கல் பாதிப்படையும் என்பது கோடை காலத்தில் இரணைமடு வற்றிவிடும். கிளிநொச்சி மக்களுக்கே குடிநீர்ப்பிரச்சினை உண்டு. இந்நிலையில் குடாநாட்டுக்கான நீர்விநியோகம் குளத்தின் நீரின் இருப்பளவு மேலும் குறைவடையச் செய்யும். இதனால் விவசாயம், குடிநீர் இரண்டுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பது ஓரளவு ஏற்றுக் கொள்ளக் கூடியதே. குடிநீருக்கான தேவை 10 MCM நீர் மட்டுமே. கடலில் கலக்கும் மற்றும் ஆவியாதலுடன் ஒப்பிடுமிடத்து இந்தளவு மிகக் குறைவானதே. அதுமட்டுமன்றி இக்காலத்தில் கடல்நீர் சுத்திகரிப்பு உட்பட வேறு மூலங்களிலிருந்தும் நீரைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. இதற்கு மேலாக இரணைமடுவிலிருந்தான தற்போதைய நீர் விநியோகத்தில் பலவீனங்கள் பல காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளன. நீண்டகாலம் பராமரிப்பின்றிக் காணப்படும் விநியோகட்டமைப்புகள், வயல்களில் அளவுக்கதிகமாக நீர்தேக்கல், சிக்கனமின்மை போன்ற காரணங்களால் அதிகளவான நீர் விரயமாவதும் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றைச் சீர்செய்வதன் மூலம் கிளிநொச்சி மக்களின் தேவைகளை கூடியளவு பூர்த்திசெய்ய முடியும்.

> இந்தப் பிரச்னையைத் தீர்க்கவேண்டிய முழுப்பொறுப்பும் சிறிதரனிடம் தான் உள்ளது. ஏனெனில் இப்பிரச்சினை தொடங்கிய காலத்திலிருந்தே அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். அதற்கு மேலாக இருமாவட்ட மக்களதும் அதிக ஆதரவைப் பெற்ற ஒருவராகவும் உள்ளார். சமகாலத்தில் இந்தவிடயத்தில் அரசாங்கத்தை வலுயுறுத்துவதற்கான அரசியல் செல்வாக்கும் அவரிடம் உண்டு.

குடாநாட்டு மக்களின் தவறான புரிதல்களில் ஒன்று கிளிநொச்சி மக்கள் குடிக்க நீர் தரமறுக்கிறார்கள் என்று ஒற்றைவரியில் தீர்மானிப்பது. அதனடிப்படையில் அந்த மக்களையும் அவர்களின் அரசியல் தலைவர்களையும் திட்டித் தீர்ப்பது. இந்தவிடயத்தில் அம்மக்களின் மனநிலையிலிருந்து யாழ் மக்கள் ஒரு கணம் சிந்திக்க வேண்டும். இயல்பாகவே தனக்கு மிஞ்சித்தான் தானமும் தருமமும் என்பது மனித இயல்பு. சரியானமுறையில் மக்கள் தெளிவுபடுத்தப்படாமலும் தவறானமுறையில் கருத்தேற்றம் செய்யப்படுவதாலும் எளிமையான பிரச்சினைகள் சிக்கலாக்கப்படுகின்ளன. மேலும் குடாநாட்டு மக்களுக்கான குடிநீருக்கான மார்க்கம் இரணைமடு மட்டுமன்று. இரணைமடு நீர் வேண்டும் என்று வலுவாகக் குரல் எழுப்பும் யாழ்ப்பாண மக்கள் அதேயளவு வலுவை ஏனைய நீர்மூலங்களை விருத்தி செய்ய வேண்டும் என்று கோரிக்கைகளில் காட்டுவதில்லை. அதற்கு மேலாக குடாநாட்டு நிலக்கீழ் நீர்வளத்தை நிலையான வகையில் பேணவேண்டும் என்று சிந்திப்பதும் செயற்படுவதும் மிக்க் குறைவு. ஒருபுறத்தில் நிலக்கீழ் நீர்வளங்களைப் பேணும் பண்டைய முறைகளை படிப்படியாக அழித்து வருகிறோம். மறுபுறத்தில் தோட்டப்பயிர்களுக்கு அளவுக்கதிகமாக நிலத்தடி நீரை உறுஞ்சி விரயமாக்குகிறோம். நிலத்தடி நீரைப் பேணுவதற்கான நவீன முறைகளை நாம் இன்னும் ஆரம்பவிக்கவில்லை. அதேபோல பயிர்களுக்கு அளவாக நீரை வழங்கும் நவீன நீர்ப்பாசன முறைகளையும் மிகக் குறைந்தளவே கைக்கொள்கிறோம். குடாநாட்டுக் குடிநீர்ப் பிரச்சினையின் தாக்கத்தைக் ஒரளவேனும் குறைப்பதற்கான இவ்வாறு வழிமுறைகளில் கவனஞ் செலுத்ததாது இரணைமடுவில் மட்டும் கண்வைப்பது என்பதும் தவறானது. இவற்றுக்கு மேலாக குடிநீரைப் பெறுவதற்காக இப்போது சொல்லப்படும் உத்தரவாதங்கள் பின்னர் கைவிடப்படலாம் என்ற கிளிநொச்சி மக்களின் இயல்பான ஐயத்தையும் புறமொதுக்கிவிடமுடியாது. ஏனெனில் அரசியல், நிர்வாகம் போன்றவற்றில் இன்றும் பெருமளவு கோலோச்சிவரும் யாழ்ப்பாண மேட்டுக்குடியினர் மீதான நம்பிக்கை ஏனைய பிரதேச மக்களுக்குக்குக் குறைவு. பேரினவாதம் தோன்றியதற்கான காரணிகளில் அதுவும் ஒன்று.

மாவட்டம், மாகாணம் என்பவை எல்லாம் நிர்வாக அலகுகள் மட்டுமே. தமிழர் தாயகத்தை வடக்கு கிழக்காக கூறுபோட்டுவிட்டார்களே என ஆதங்கப்படும் நாம் மாவட்ட அடிப்படையில் பிரிவினைகளை வளர்ப்பது எவ்வாறு நியாயமாகும். ஊரில் ஒரு பேச்சு வாக்கியம் உண்டு. "பிந்திவந்த தீவானை முந்திவந்த தீவான் தீவான் தீவான்" என நக்கலடிப்பார்களாம். அதைப்போல்தான் கிளிநொச்சி மக்கள் யாழ்ப்பாணத்துக்கு நீர்தரமுடியாது என்று கூறுவது. நமக்கிடையில் புரிந்துணர்வை வளர்ப்பதுடன் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்ப்பதன் மூலமே இதற்கான சிறந்த தீர்வைப் பெறமுடியும். இந்த விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்குக் கூடிய பொறுப்புள்ளது. ஏனெனில் இப்பிரச்சினையின் பின்னால் உள்ள அரசியல்வாதியாக அவரையே சுட்டிக்காட்டப்படுகிறது என்பது இரகசியமானதொன்றல்ல. கடந்த கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அர்ச்சுனாவின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும்போது கிளிநொச்சி மக்கள் யாரும் குடிநீர் தரமாட்டம் என்று கூறவில்லை. நீங்கள் எல்லோரும் கூடி ஆராய்ந்து சாத்தியமான முடிவை எடுங்கள் அதற்கு நாங்கள் தடையில்லை என்று கூறியுள்ளதை அவதானிக்க முடிந்தது. ஆனால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய முழுப்பொறுப்பும் அவரிடந்தான் உள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை ஐயாவுக்கு ஒரு திறந்த மடல்

## வாசகர் கடிதம்:

02.01.2025 ஈழநாடு இதழில் வெளியான செய்தி "தமிழரசை முடக்க திரை மறைவில் சதி" என்னும் தலைப்பில் ஒரு செய்தி பார்த்ததால் ஈழநாடு ஊடாக இம்மடலை வரைகின்றேன்.

தாங்கள் தமிழரசில் ஓர் அங்கத்தவனாக இருந்து, தமிழ் மக்களின் அரசியல் விடிவுக்காக செய்த தியாகம் எழுத்தில் வடிக்கக் கூடியதில்லை, அத்தோடு தாங்கள் பட்ட கஷ்டங்கள், நஷ்டங்கள், தியாகம் என்பன, நான் எழுதித்தான் தெரிய வேண்டும் என்றில்லை, அத்தோடு அன்றிலிருந்து இன்று வரை தமிழ் தேசியத்தின்பால் உழைக்கும் கரங்களுக்கு உண்மை புரியும்.

அந்தச் செய்தியில் "கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலர் இலங்கை தமிழரசுக் கட்சியை முடக்குவதற்கு திரைமறைவில் சதி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்" எனவும், "குறுக்கு வழியில் கட்சிக்குள் நுழைந்தவர்கள், தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கட்சி இருக்க வேண்டும் எண்று எண்ணுபவர்களின் சுயநல நடவடிக்கைகளால்தான் கட்சி பலவீனமானது" என்று தாங்கள் திருவாய் மலர்ந்தருளியமையை வாசித்ததில் எனக்கொரு மயக்கம்.

தாங்கள் எவ்வளவு காலமாக தமிழரசுவிற்கு தலைவராக பதவி வகித்தீர்கள்? தங்களின் மேலான தலைமத்துவக் காலத்தில், இந்த குறுக்கு வழியில் கட்சிக்குள் நுழைந்தவர்களை தாங்கள் கண்டும் காணாதவராய் இருந்தீர்களா? அல்லது அவர்களின் வருகைக்கு தாங்களும் அச்சாரம் அமைத்து அமைதியாய் இருந்தீர்களா? என்று தங்களை நோக்கி கேட்காமல் இருக்க முடியவில்லை.

தமிழரசுக் கட்சியின் தலைவருக்கு, என்னென்ன உரிமைகள் இருக்கிறது என்பதாவது, தங்களுக்கு தெரிந்திருக்கிறதா? ஏனென்றால் வெளியிலிருந்து பார்க்கின்ற என் போன்றவர்களுக்கே புரிகிறது, தமிழரசின் பதில் செயலாளருக்கு இருக்கிற உரிமைகூட, தலைவருக்கு இல்லை என்பது.

இருந்தும், தாங்கள் தலைமை தாங்கிய காலத்தில், கட்சிக்குள் குறுக்கு வழியில் வந்து குழப்பம் விளைத்தவர்களுக்கு எதிராக தாங்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? அதாவது, தற்பொழுது தங்களின் தலைமைக்கு எதிரான நடவடிக்கை போன்று.

அண்மையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தல் வேட்பாளர் தெரிவுகளின் பின், தாங்கள் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ததாகவும், அதன் பின்னர் வந்த செய்திகளில் பதில் பொதுச்செயலாளர், தனக்கு தங்கள் இராஜினாமா கடிதம் கிடைக்கவில்லை என்றும், தலைவராகிய தங்களுக்கு, யாருக்கு கடிதம் அனுப்பவேண்டும் என்பதைத் தெரியாதவர் தாங்கள் என்றும் சிலர் பதிவிட்டதையும் பார்த்திருக்கிறேன், ஆனால் இப்பொழுது மட்டும் அந்தக் கடிதம் எங்கிருந்து வந்தது என்பது புரியவில்லை.

மேலும், அந்தச் செய்தியில் "போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சியை முடக்க வேண்டும் என்று தென்னிலங்கை விரும்பியது" என்றும் "நானும் முன்னாள் தலைவர் சம்மந்தனும் தமிழரசுக்கட்சியைப் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பாது காத்தோம்" என்று அந்தச் செய்தி சொல்கிறது.

உண்மையில் மறைந்த முன்னாள் பா. உ. சம்பந்தன் ஐய்யாவுக்கு கட்சியின் வீழ்ச்சியில் பங்கு இருந்திருக்கிறது என்பதை, ஏனோ புரிந்து கொள்ளாதிருந்திருக்கிறீர்கள் என்பது சகிக்க முடியாதிருக்கிறது, அத்தோடு தன்னுடைய உதவிக்காகவும், நிர்வாக சுகத்திற்காகவும் போரின் போது மக்கள் பட்ட அவஸ்தைகளை, உணர்ந்திராத ஒருவரை தமிழரசுக்குள் கொண்டு வந்து நியமன பாராளுமன்ற உறுப்பினராக்கியபோதே கட்சிக்கு சொந்தச் செலவில் செய்வினை செய்தாச்சு என்பதை தெரியாதது போல் இருந்தது தங்கள் தப்பில்லையா?

ஏன்? கன தூரத்தில் நின்று கேள்விகளை கேட்காமல், கொஞ்சம் கிட்ட வருவோம்.

தந்தை செல்வா காலத்திலிருந்து, தமிழரசுவுக்கு தலைமயேற்ற தங்கள் காலம் வரை கட்சிக்குள் இருந்த ஒற்றுமையை உடைத்து, தேர்தல் நடத்தி தலைமை தெரிவு செய்யப்பட வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்று, தேர்தல் வரை சென்று, பின்பு தனக்கு வேண்டிய ஒருவர் மூலம் திருகோணாமலையில் வழக்கொன்றை பதிவு செய்து, கட்சியின் பாரம்பரியம், ஒற்றுமை, உறுதியற்ற தலைமை என்பவற்றை கேள்விக்குறியாக்கிய கேள்வியின் நாயகனை இனங்காணத் தவறியது. யாரது தவறு?

தலைமப் பதவிதான் போச்சு, சரி செயலாளர் பதவியாவது தாங்கோ என்று கேட்ட போதாவது அந்த கேள்வியின் நாயகனின் பதவி ஆசையும், சூழ்ச்சியும் புரியாமல் இருந்த தலைமைதானே தாங்கள்!

இன்றும் கூட அந்த நபர் தனக்கு பின்னால் சில பேர்வழிகளை மத்திய குழுவிற்குள் வைத்திருந்து, மற்றையவர்களை சிப்பிலியாட்டுவது தெரியாமல் இருந்தீர்களா? அல்லது கண்டும் காணாமல் இருந்தீர்களா? உண்மையில் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளுங்கள், அந்த கேள்வியின் நாயகனுக்கு சார்பாக அநீதிகளை கண்டு கொள்ளாமல், மதில் மேல் பூனையாக இருந்தால், தற்பொழுது தலைவராக இருக்கும் ஐய்யாவைப்போல் தாங்களும் சில பதவிகளை அனுபவித்து விட்டு போகலாம்.

மேலும் தங்கள் பதிவில் "போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சியை முடக்க தென்னிலங்கை விரும்பியது" என்று கூறியிருப்பதும், அது ஏதோ ஒரு வகையில் தென்னிலங்கை முன்னோக்கி பாய்ந்து கொண்டிருக்கிறது என்பது மறுப்பதற்கில்லை!

தமிழ் மக்களின் தேசியத்தை பறைசாற்றி, பல தியாக உள்ளம் கொண்ட தலைமைகளினால் கட்டி வழர்க்கப்பட்ட தமிழரசுக் கட்சி , உலக்கை தேய்ந்து உளிப்பிடியாய் நிற்பதற்கு, கடந்த காலங்களில் தங்களது தலைமத்துவமும் ஒரு காரணம் என்பதை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்!

**- கே அருண்**
(மொன்றியல், கனடா)

---




# வியுக்தியார் பதில்கள்

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனாவுக்கு இம்மாத நடுப்பகுதியில் மேற்கொள்ள உள்ள அதிகாரபூர்வ பயணம் மற்றும் அதுதொடர்பில் வெளியாகும் செய்திகள் குறித்து புதுடில்லி தீவிர அவதானம் செலுத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களில் அறியமுடிகிறது என்று ஒரு செய்தி பார்த்தேன். அவர் சீனாவுக்கு செல்வதை இவர்கள் எதற்காக அவதானத்துடன் பார்க்கவேண்டும்?

**வியுக்தியார்:** என்ன கேள்வி இது. நமது ஜனாதிபதி ஒரு இடதுசாரி தலைவர். இலங்கையில் ஆட்சிக் கட்டிலில் ஏறிய முதலாவது இடதுசாரித் தலைவர். அவர் ஆட்சிக்கு வந்தபோதே, இடதுசாரி தலைவர் ஒருவர், அதுகும் சீனா சார்பான ஒருவர் ஆட்சிக்கு வந்துவிட்டார் என்று இந்தியாவில் பரவலாக விமர்சிக்கப்பட்டது. ஆனால் அவரோ தனது முதலாவது வெளிநாட்டு விஜயத்தை இந்தியாவில் தொடங்கியது மாத்திரமல்ல, இந்தியா எதனை நினைத்து அவர் மீது அச்சமடையுமோ அதனையெல்லாம் நன்கு புரிந்து கொண்டவராக அவர் தனது இந்திய விஜயத்தின்போது நடந்துகொண்டதை நீங்களும் அவதானித்திருப்பீர்கள். இந்தியாவின் பாதுகாப்பு பற்றி பேசினார், இந்தியாவில் ஆட்சியிலிருக்கும் மோடியின் நண்பர் அதானியின் முதலீடுகளை பாதுகாப்பது பற்றி பேசினார். அதிகம் ஏன், மீனவர் பிரச்சினைக்கு கூட மனிதாபிமான ரீதியில் தீர்வுகாண திடசங்கற்பம் செய்தார். இப்படி தங்களை சந்தோசப்படுத்திய அவர், சீனா செல்கின்றபோது அவர்களையும் அப்படித்தான் சந்தோசப்படுத்துவார் என்பது இந்தியாவுக்கு தெரியாதா என்ன? அதுதான் அவர்கள் அவர் அங்கு என்ன செய்கிறார், அவர் செய்கின்ற அலுவல்கள் தங்களை ஏதேனும் வகையில் பாதிக்குமா? என்று பார்க்காமல் இருப்பார்களா?

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட வரைவு குறித்து தமிழ்த் தேசிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு உத்தேசித்திருப்பதாகவும், எதிர்வரும் 7 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் கலந்துரையாடி அச்சந்திப்புக்குரிய திகதியைத் தீர்மானிக்கவிருப்பதாகவும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கிறாரே. அது என்ன தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டம்? அந்த அமைப்புத்தான் காணாமல்போய் பல வருடங்கள் ஆகிவிட்டனவே.

**வியுக்தியார்:** கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ் தேசிய கட்சிகளின் எம்.பி.க்களை சந்தித்து ஒரு பொதுவான தீர்வை எட்டுவதற்கு முயற்சிப்பது நல்லதுதான். அதற்காக அவர் வெறுமனே சமஷ்டித்தீர்வை வலியுறுத்துவது பற்றி பேசுவோம் என்று சொல்லாமல், தான் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை முன்வைத்து பேச விரும்புவது தவறில்லைத்தான். ஆனால், அவர் நல்லதை செய்கின்றபோதும், அதனை யதார்த்தபூர்வமாக அணுகுவது நல்லது. அவர் எப்போதும் யதார்த்தத்தை புரிந்துகொண்டு செயற்பட்டவர் அல்லவே என்று நீங்கள் நினைக்கலாம். அதுவல்ல நாம் சொல்லவருவது. இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு விடயத்தை தெளிவாக சொல்லியிருக்கின்றது. அதாவது நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பை முழுமைப்படுத்தி அமுல் படுத்துவது என்பதே அவர்கள் கொடுத்திருக்கின்ற வாக்குறுதி. அந்த அரசியலமைப்பை தயாரித்தவர்களில் முக்கியமான பங்களிப்பை செய்தவர் தமிழ் அரசின் சுமந்திரன். அதுமாத்திரமல்ல, அந்த முயற்சியில் ஜேவிபியும் முக்கிய பங்களிப்பை செய்தது என்பதாலேயே அவர்கள் அதனை தொடர விரும்பினார்கள். இப்போது யதார்த்பூர்வமாக சிந்தித்திருந்தால், அதிலுள்ள குறைபாடுகள், அல்லது தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமுடியாத விடயங்களை பட்டியலிட்டு அதனை முழுமைப்படுத்துவதற்கு உதவுவதுதான் பொருத்தமானதாக இருக்கும், அதைவிட்டுவிட்டு புதிதாக ஒன்றை எடுத்துக்கொண்டு கிளம்ப நினைப்பது புத்திசாலித்தனமானதா என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும். அதனை செழுமைப்படுத்த நினைத்தால் அவர்கள் முதலில் பேசவேண்டியது சுமந்திரனுடன்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** நாட்டின் பொருளாதாரம் இன்னமும் மிகவும் நெருக்கடியான நிலையிலேயே காணப்படுகிறது. இதிலிருந்து மீண்டு வர சில இக்கட்டான முடிவுகளை எடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** 'யானை வரும் பின்னே. மணி ஓசை வரும் முன்னே" என்று ஒரு முதுமொழி இருக்கின்றது. அதுபோலத்தான் இது என்று நினைக்கின்றேன். ஒரு உதைபந்தாட்ட போட்டி நடக்கின்றபோது ஒரு வீரர் கோல் அடிக்க ஓடிக்கொண்டிருப்பார். கோல்கம்பத்திற்கு அருகே சென்ற பின்னர் அதனை தவறவிட்டபோது மைதானத்தில் இருக்கின்ற பார்வையாளர்கள், அல்லது தொலைக்காட்சியில் அதனை பார்த்துக்கொண்டிருக்கின்ற ஒருவர், அந்த வீரரை திட்டுவார். ஆனால் அதனை அடிக்க ஓடிய வீரருக்குத்தான் தெரியும் அவர் எவ்வளவு முயன்று பார்த்தார் என்பது. அதேபோலத்தான், பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முன்னாள் ஜனாதிபதி ரணில், சில இக்கட்டான முடிவுகளை எடுத்தபோது, மைதானத்திற்கு வெளியே இருந்து பார்த்துக்கொண்டிருந்த தேசிய மக்கள் சக்தியினர் அதனை விமர்ச்சித்தனர். இப்போது மைதானத்திற்கு உள்ளே இறங்கிய பின்னர்தானே அவர்களுக்கு கஸ்டம் தெரிகிறது. அவ்வளவுதான். அதனால்தான் முன்னெச்சரிக்கையாக அறிவிப்புக்களை தருகிறார்கள்.

---

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து டாக்டர்களை தாக்குகின்றார்கள். நீதிமன்றத்தின் வாயிலில் வைத்து சாட்சியை வாளால் வெட்டுகின்றார்கள். யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் மோட்டார் சைக்கிளில் 'றேஸ்' நடத்துகிறார்கள். என்னதான் நடக்கின்றது என்று புரியவில்லை. உங்களுக்காவது ஏதாவது புரிகின்றதா?

**வியுக்தியார்:** இதில் புரிந்துகொள்வதற்கு என்ன இருக்கின்றது. ஓர் ஆஸ்பத்திரியில் பணியாற்றிவிட்டு அந்த ஆஸ்பத்திரியில் நடந்த - அல்லது நடந்ததாக சில புகார்களை வெளியிட்டு பரபரப்பாக்கிய ஒருவர் பின்னர் எப்படியெல்லாம் நடந்துகொண்டார் என்பதை பார்த்திருக்கிறோம். அவர் இப்போது அந்த ஆஸ்பத்திரியில் நடந்ததாககூறிய எந்த விடயத்தைப் பற்றியும் கதைப்பதில்லை.

ஆனால் மக்கள் அவரை ஹீரோ ஆக்கிவிட்டார்கள். அதனால்தானோ என்னவோ இப்போதெல்லாம் நமது இளைஞர்கள் அவரை பின்தொடர முயல்கிறார்கள் என்று நினைக்கின்றேன்.

# இந்தியாவுக்கு எதிரான பெரும் சவால்:
## பங்களாதேஷில் மீள கால் பதிக்கும் பாகிஸ்தான்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

1971ஆம் ஆண்டு வங்கதேச விடுதலைக்காக பாகிஸ்தானுடன் இந்தியா நடத்திய யுத்தத்தால் தான் வங்கதேசம் என்ற ஒரு புதிய நாடு உருவானது. அந்த யுத்தத்தில் பாகிஸ்தான் ராணுவ தளபதி தமது 93,000 பாகிஸ்தான் ராணுவ வீரர்க ளுடன் இந்தியாவிடம் சரணடைந்தார். உலக யுத்த வரலாற்றிலேயே 93,000 வீரர்கள் சரணடைந்தது வங்கதேசத்தில் இந்தியா நடத்திய யுத்தத்தில்தான்.

தற்போது இந்தியாவின் பிராந்திய நலனுக்கு எதிராக 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக, பாகிஸ்தான் இராணுவம் வங்கதேசம் செல்ல உள் ளது. வங்கதேச இராணுவத்திற்கு பிப்ர வரி 2025 முதல் மைமென்சிங் கன்டோன் மென்ட் மற்றும் பிற இடங்களில் பாகிஸ்தான் ராணுவத்தால் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் ஒரு பகுதியாக - கிழக்கு பாகிஸ்தானாகவே வங்கதேசம் 1971-ம் ஆண்டுக்கு முன்னர் வரை இருந்தது. மொழி அடிப்படையில் கிழக்கு பாகிஸ்தானை பாகிஸ்தான் ராணுவம் ஒடுக்கி பல படுகொலைகளை செய்தது. இதனால் வங்கதேச தனிநாடு விடுதலைப் போரை முஜிபுர் ரகுமான் நடத்தினார். அவருக்காக பாகிஸ்தானுடன் இந்தியா யுத்தம் நடத்தியது.

அப்போது நடந்த போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானை வரலாற்று ரீதியாக பகைமை கொண்ட வங்கதேசம், தற்போது இந்த பயிற்சி ஒத்துழைப்பு ஒப்பந்தம் இந்தியாவிற்கு எதிரானதா எனும் கவலைகளை எழுப்பியுள்ளது. வங்கதேச இடைக்கால அதிபர் யூனுஸ் ஆட்சியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஒப்பந்தத்தின் படி, பாகிஸ்தானைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் தரவரிசை அதிகாரிகளால் இந்த பயிற்சி நடத்தப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன் முறையாக இந்திய அரசுக்கு எச்சரிக்கை மணி அடிக்கும் வகையில் பாகிஸ்தான் ராணுவம் வங்கதேசத்துடன் பிப்ரவரி 2025 முதல் தனது ராணுவத்திற்கு பயிற்சி அளிக்க ஒப்பந்தம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரியில் மைமென்சிங் கன்டோன்மென்ட்டில் தொடங்கி பங்களாதேஷ் இராணுவத்தின் நான்கு மாநிலங்களில் பயிற்சி நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் இராணுவத்தின் பயிற்சி மற்றும் கோட்பாடு கட்டளை தலைமையகமாக மைமென்சிங்கில் உள்ளது. பாகிஸ்தானில் இருந்து வரும் மேஜர் ஜெனரல் தர அதிகாரிகள் வங்கதேச ராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கலாம் என ஆதாரங்கள் கூறுகின்றன.

இஸ்லாமாபாத்துடன் உறவுகளை மேம்படுத்த தற்போதைய யூனுஸ் ஆட்சியின் முயற்சியின் பின்னணியில் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் இராணுவங்களுக்கு இடையிலான ஒத்துழைப்புக்கான இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டது.

பாகிஸ்தான் ராணுவத்தால் வழிநடத்தப்படும் முதல் பயிற்சித் தொகுதி ஒரு வருடம் நீடிக்கும். பாகிஸ்தான் ராணுவத்தின் கூட்டுப் படைத் தலைமை ஜெனரல் எஸ் சம்ஷாத் மிர்சாவால் வங்காள தேசத்திற்கான ராணுவ பயிற்சி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது வங்காளதேசத்தில் இராணுவ அதிகாரிகள் மற்றும் அவாமி லீக் ஆட்சியின் கீழ் பல ஆண்டுகளாக இந்திய ஆதரவு சித்தாந்தத்துடன் வங்காளதேச இராணுவத்தின் போதனைக்கு எதிராக தற்போதய நிலமை அச்சத்தை எழுப்பியுள்ளது.

பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற அதிகாரிகள், 1971 இல் வங்க நாடு சுதந்திரம் அடைய முதல் இரண்டு தசாப்தங்களாக பங்களாதேஷ் இராணு வத்தில் தலைமைப் பதவிகளை வகித்த னர். இந்த பட்டியலில் ஜெனரல் ஜியாவுர் ரஹ்மான் மற்றும் லெப்டி னன்ட் ஜெனரல் எச்.எம். எர்ஷாத் ஆகிய இருவரும் ஜனாதிபதிகளாக பதவியேற்றனர்.

ஆயினும் முன்னாள் அதிபர் எர்ஷாத் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் முன்னாள் மாணவர் ஆவார். இந்தியாவில் உள்ள அரசியல் தலைமையுடன் நல்ல தொடர்புகளைப் பேணி வந்தார்.

தற்போது புதிய ஆட்சியில் வங்காள தேச இராணுவத்தால் இந்திய எதிர்ப்புக் கோட்பாட்டை வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டதாக இந்தப் பயிற்சிகள் உள்ளன என்று கூறப்படுகிறது.

அதேவேளை வங்கதேச அரசால் அவாமி லீக் மற்றும் ஷேக் ஹசீனா ஆகியோருக்கு நெருக்கமானவர்கள் என்று கருதப்பட்ட பங்களாதேஷ் இராணுவத்தின் தலைமை தற்போதைய ஆட்சியால் குறிவைக்கப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

பங்களாதேஷில் பாகிஸ்தான் ராணுவம் இருப்பது நிலத்தால் சூழப்பட்ட வடகிழக்கு இந்திய மாநிலங்களுக்கு சவாலை உருவாக்கி உள்ளது.

இதற்கிடையில், கடந்த 21.12.2024 வெள்ளிக்கிழமை சிட்டகாங் துறைமுகத்திற்குள் நுழைந்த கப்பல் மூலம் பாகிஸ்தானில் இருந்து வெடிபொருட்கள் பங்களாதேஷை அடைந்ததாக கூறப்படுகிறது.

வெடிபொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் பல அவற்றில் இருந்தன. உள்ளூர் அதிகாரிகள் கப்பலின் சரக்குகளை தேடும் நடவடிக்கையை தொடங்கியபோது அவை கண்டுபிடிக்கப்பட்டது.

வெடிபொருட்களைக் கொண்ட சரக்குகளின் நோக்கம் என்ன என்பதை துறைமுக அதிகாரிகள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வங்கதேசத்தில் இடைக்கால அரசு ஒன்று அமைந்த போதும் இந்துக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு எதிரான அட்டூழிய வன்முறைகள் வெறித்தனமாக தலைவிரித்தாடுகிறது.


இந்து கோவில்கள் தாக்கப்படுவதும் இந்து அதிகாரிகள் அரசு பதவிகளில் இருந்து விரட்டியடிக்கப்படுவதும் தொடருகிறது.

கடந்த ஆண்டு ஆட்சி மாற்றத்தின் விளைவாக வங்கதேசத்தின் விடுதலைக்காக போராடிய வங்க தேசத்தின் தந்தை முஜிபுர் ரகுமானின் சிலையை தகர்தனர்.

அத்துடன் வங்கதேச விடுதலைக்கான யுத்தத்தின் சரித்திர சாட்சியாக இருந்த சிலையையும் வன்முறையாளர்கள் தகர்த்துள்ளனர். உலக யுத்த வரலாற்றிலேயே 93,000 வீரர்கள் சரணடைந்தது வங்கதேசத்தில் இந்தியா நடத்திய யுத்தத்தில்தான்.

இதனை வெளிப்படுத்தும் வகையில் தலைநகர் டாக்காவில் சிலை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. வங்கதேசத்தில் மதவெறியர்கள் கை ஓங்கி இருக்கும் நிலையில் டாக்காவில் உலக யுத்த வரலாற்றின் பெருமிதமிக்க சாட்சியாக இருந்த இந்த சிலையும் தகர்க்கப்பட்டுள்ளது.


இந்திய எதிர்ப்பாளர்கள்தான் இத்தகைய நாசகார வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் என பலர் கருதுகின்றனர். இந்திய கலாசார மையம், கோவில்கள், இந்துக்களின் வீடுகளைத் தகர்த்தவர்கள் இப்போது 1971ஆம் ஆண்டு யுத்தத்தை நினைவூட்டும் சிலையையும் தகர்த்துள்ளமை இந்திய விரோதப் போக்கை வெளிப்படுத்துகிறது.




1971க்குப் பிறகு முதல் முறையாக வங்கதேசத்துக்கு பாகிஸ்தான் ராணுவம் திரும்ப திட்டமிட்டுள்ளது. தற்போது புதிய ஆட்சியில் வங்காளதேச இராணுவத்தால் இந்திய எதிர்ப்புக் கோட்பாட்டை வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டதாக பாகிஸ்தான் இராணுவ பயிற்சிகள் உள்ளன என்று கூறப்படுகிறது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச அச்சுத் திணைக்களத்துக்கு புதிய இணையத்தளம் உருவாக்கம்

கொழும்பு, ஜன.05

அரச அச்சுத் திணைக்களத்தின் இணையத்தளம் மீது மேற்கொள்ளப் பட்ட சைபர் தாக்குதலைத் தொடர்ந்து, அரச அச்சுத் திணைக்களத்துக்கு புதிய இணையத்தளமொன்றை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக இலங்கை கணினி அவசர செயல் பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அரச அச்சுத் திணைக்களத்துக்கான புதிய இணையத்தளம் தற்போது உரு வாக்கப்பட்டு வருகிறது. சைபர் தாக்கு தலின் பின்னர் உத்தியோகபூர்வ இணையத்தளம் துரிதமாக மீளமைக்கப் பட்டுள்ளது. எனினும், சைபர் தாக்கு தலை மேற்கொண்ட தரப்பினர் குறித்து இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் ஏதும் கண்டறியப்பட வில்லை.

எனவே, பாதுகாப்பான புதிய உத்தி யோகபூர்வ இணையத்தளம் ஒன்றை உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தாக இலங்கை கணினி அவசர செயல் பாட்டுப் பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக்க தமுனுபொல தெரிவித்தார்.(எ)

## டிசெம்பர் மாதம் கடைசி வாரத்தில் நாள் தோறும் 11, 000 பேர் வருகை

### 2025இல் 30 இலட்சம் சுற்றுலா பயணிகளை ஈர்க்க திட்டம்

கொழும்பு, ஜன.05

கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில், ஒவ்வொரு நாளும் 11, 000 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பய ணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாகவும், இந்த வருடம் 30 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு கொண்டுவர எதிர்பார்ப்பதாகவும் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரி வித்தார்.

எனவே, சுற்றுலாத் துறையை தேசிய நலன் கருதி வெற்றியடைய செய்ய அனை வரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

சிகிரிய பிரதேசத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பய ணிகள் எதிர்நோக்கும் பிரச்னைகளை தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கான கலந்து ரையாடல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சில் நடை பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், அனு மதிச்சீட்டு வரிசையில் நீண்ட நேரம் காத்து நிற்பது, முதலுதவி நிலையங்கள் இல்லாமை, போதிய நீர் வசதியின்மை, குளவி கொட்டினால் பாதுகாப்பு போன்ற 15 விடயங்கள் இதன்போது ஆராயப் பட்டன.

(எ)

## சாரதி அனுமதிப்பத்திரங்களை இம்மாதம் வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஜன.05

அச்சிடுவதில் ஏற்பட்டிருந்த தாமதம் காரணமாக, தற்போது நிலுவையில் உள்ள சாரதி அனுமதிப்பத்திரங்களை இம் மாதத்துக்குள் அச்சிட்டு வழங்க நட வடிக்கை எடுக்கப்படும் என போக்கு வரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன தெரிவித்தார்.

இதற்கமைய, அச்சிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ள சுமார் 1, 30,000 சாரதி அனுமதிப்பத்திரங்களை ஜனவரி மாதம் முடிவதற்குள் வழங்க நடவடிக்கை எடுக் கப்படும் என்றார். (எ)

## பாராளுமன்ற உறுப்பினர் வீட்டில் பணம் திருட்டு!

கொழும்பு, ஜன.05

ஹொரணை பிரதேசத்தில் உள்ள களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வீட்டில் பணம் திருட்டுப் போயுள்ளதாக ஹொரணை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் யாரும் இல்லாத வேளையில் திருடர்கள் நுழைந்து 25, 000 ரூபாய் பணத்தை திருடிச் சென்றதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

## இரணைமடு நீரும்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனெனில் இப்பிரச்சினை தொடங் கிய காலத்திலிருந்தே அவர் பாராளு மன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். அதற்கு மேலாக இரு மாவட்ட மக்கள தும் அதிக ஆதரவைப் பெற்ற ஒருவரா கவும் உள்ளார். சமகாலக் தில் இந்த விடயத்தில் அரசாங்கத்தை வலுயுறுத் துவதற்கான அரசியல் செல் வாக்கும் அவரிடம் உண்டு. இரு மாவட்ட மக்க ளையும் வழிப்படுத்த வேண்டியது அவ ரது கடமையும் கூட. இவ்வாறு இருக் கும்போது மற்றவர்களை நோக்கி நடவடிக்கை எடுங்கள் என்று கூறித் தப்பவது மக்கள் தலைவனுக்கு அழகான செயலன்று சந்தேகத்தை மேலும் வலுப் படுத்துவதாகவே அமை யும். இவ்வா றான நிலைமைக ளால்தான் அர்ச்சுனா போன்றவர்கள் உருவாகி றார்கள் என்ற உண்மையை அனைவரும் உணரவேண் டும். தன்மீது சுமத்தப்படும் பழியைப் போக்குவதற்கு சிறிதரன் விரைந்து நட வடிக்கை எடுப்பார் என்று நம்புவோம். ●

## எரிவாயு விலை தொடர்பில் லாப்ஸ் நாளை தீர்மானம்

கொழும்பு, ஜன.05

இந்த மாதத்துக்கான லாப்ஸ் எரிவாயு விலை திருத்தம் தொடர்பான முடிவை நாளை திங்கட்கிழமைக்குள் வழங்க முடியும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இம்மாதத்தில் எரிவாயு விலை தற்போதைய விலை மட்டத்திலேயே தொடர அதிக வாய்ப்புகள் இருப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, விலையை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை எனவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.(எ)

## இலங்கை அரசியலும் ஆட்சிமுறையும்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறானால், தேசிய மக்கள் சக்தி யின் பொருளாதாரக் கொள் கைகளை எப்போது அவர் நடை முறைப்படுத்தப் போகிறார் என்பது முக்கியமான ஒரு கேள்வி.

இது இவ்வாறிருக்க, புதிய அரசிய லமைப்பு ஒன்றைக் கொண்டுவரப் போவதாகவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கப் போவதாகவும் தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு வாக்குறுதி அளித்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவி னதும் தலைமையிலான அரசாங்க காலத் தில் (2015 - 2019) முன்னெடுக்கப்பட்டு இடைக்கால அறிக்கையுடன் இடையில் கைவிடப்பட்ட அரசியலமைப்பு வரை வுச் செயன்முறையை தொடர்ந்து முன்னெடுத்து நிறைவு செய்யப்போவ தாக ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத் தில் திசாநாயக்க குறிப்பிட்டிருந்தார். ஆனால், பதவிக்கு வந்த பிறகு அதைப் பற்றி அவர் பேசியதை பெரும்பாலும் காணவில்லை. ஆனால், மூன்று வரு டங்களில் புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் என்று அமைச்ச ரவைப் பேச்சாளரான நாளிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

அரசியலைப் பொறுத்தவரை, மூன்று வருடங்கள் என்பது ஒரு நீண்டகாலமா கும். அந்த காலப்பகுதிக்குள் இடம் பெறக்கூடிய பல்வேறு நிகழ்வுகள் அரசி யல் நிலைவரங்களில் மாற்றங்களை ஏற் படுத்திவிடக்கூடும். பெரும்பாலும் அரசாங்கங்கள் அவற்றின் பதவிக்காலத் தின் ஆரம்பக் கட்டங்களிலேயே புதிய அரசியலமைப்பை கொண்டு வந்திருக் கின்றன.

இலங்கையில் சுதந்திரத்துக்கு பிறகு இரு தடவைகள் புதிய அரசியலமைப் புகள் கொண்டுவரப்பட்டன. பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமை யிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1972 முற்பகுதியில் முதலாவது குடியரசு அரசியலமைப்பை கொண்டுவந்தது. 1971 ஜே.வி.பி. கிளர்ச்சி இடம்பெறாமல் இருந்திருந்தால் அதற்கு முன்கூட்டியே அந்த அரசியலமைப்பு நிறைவேற்றப் பட்டிருக்கக்கூடும்.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த ஒரு வருடத் துக்கும் சற்று அதிகமான காலத்திற்குள் இரண்டாவது குடியரசு அரசியல மைப்பை நிறைவேற்றியது. 47 வருடங்க ளாக நடைமுறையில் இருந்துவரும் அந்த அரசியலமைப்பை மாற்றுவதற்கு அல்லது நிறைவேற்று அதிகார ஜனாதி பதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு இதுகாலவரையில் முன்னெடுக்கப்பட்ட எந்த முயற்சியும் பயன்தரவில்லை.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கப் போவதாக வாக்குறுதி அளித்து பதவிக்கு வந்த எந்த ஜனாதிபதியும் அதை நிறை வேற்றவில்லை. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தனது இரண்டாவது பதவிக்காலத்தின் இறுதியில் மேலும் ஒரு வருடகாலம் கூடுதலாக அதிகாரத்தில் இருக்க முடியவில்லையே என்ற கவலை யுடன் பதவியில் இருந்து இறங்கினார்.

தனது முதலாவது பதவிக்காலத்துக்கு பிறகு ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக வாக்குறுதி வழங்கிய ஜனாதி பதி மகிந்த ராஜபக்ச இரண்டாவது பதவிக்காலத்தில் தனது அதிகாரங்களை மேலும் அதிகரிப்பதற்கு அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வந்தார். அவரின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ச ஒருபோதும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கப்போவதாக கூறவில்லை. அவரும் தனது ஆட்சிக்காலத்தில் அதிகாரங்களை அதிகரிக்கும் திருத்தத்தை கொண்டுவந் தார். ஆனால், இறுதியில் மக்கள் கிளர்ச் சிக்கு மத்தியில் அவர் நாட்டைவிட்டு தப்பியோடினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் பதவிக்காலத்தில் கொண்டுவரப் பட்ட 19ஆவது அரசியலமைப்பு திருத்தம் மாத்திரமே ஜனாதிபதியின் அதிகாரங்களில் ஓரளவு குறைப்பைச் செய்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதில் ஒருபோதும் மானசீகமான நாட்டத்தைக் காட்டவில்லை.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கக் கூடிய பாராளுமன்ற பலத்தைக் கொண் டிருந்தவர்கள் அதை ஒழிக்க விரும்ப வில்லை. அதை ஒழிக்கவேண்டும் என்று விருப்பியவர்களிடம் அதைச் செய்வதற் கான பாராளுமன்ற பலம் இருக்க வில்லை.

ஆனால், தேசிய மக்கள் சக்தி அர சாங்கம் புதிய அரசியலமைப்பை கொண்டுவராமல் விடுவதற்கோ அல்லது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்காமல் விடுவதற்கோ எந்த காரணத்தையும் கூறமுடியாது. வேறு எந்த கட்சியையும் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் கூடுத லான பலம் பாராளுமன்றத்தில் இருக் கிறது. இந்த அரசாங்கமும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழக்கவில்லையானால் அதற்கு பிறகு எவராலும் அதைச் செய்ய முடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

மூன்று வருடங்கள் கடந்துபோய் விட்டால் தற்போதைய ஜனாதிபதி யினதும் அரசாங்கத்தினதும் பதவிக்காலங் களின் இறுதிப்பகுதி வந்துவிடும். அப் போது அடுத்த தேர்தல்கள் பற்றிய அக்கறை முன்னுரிமைக்கு வந்துவிடும். அதனால் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரும் நோக்கத்திலும் தொய்வு கள் ஏற்பட்டு விடலாம். அதனால் அரசாங்கத்தின் பதவிக்காலத்தின் முற்பகுதியில் அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளை துரிதமாக முன்னெ டுப்பதே நடைமுறைச் சாத்தியமானதும் விவேகமானதுமான செயன்முறையாக இருக்கும்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கப் போவதாக கூறிக்கொண்டு பதவிக்கு வந்த நான்காவது ஜனாதிபதியாக திசாநாயக்க விளங்குகிறார். கடந்த செப்டெம்பரில் அவர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றபோது ஜே. வி.பி.யின் சில தலைவர்கள் இலங்கை மக்கள் தங்களது இறுதி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்திருக்கிறார்கள் என்று குறிப்பிட் டார்கள். ஜனாதிபதி திசாநாயக்கவும் கூட தானே இறுதி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருப்பார் என்று நம்புவதாக கூறினார்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை அறி முகப்படுத்திய ஜே.ஆர். ஜெயவர்தன விடம் அவர் அரசியலில் இருந்து ஒய்வு பெற்ற பிறகு ஒரு இந்திய செய்தியாளர் அந்த ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது குறித்து கேட்டபோது "அவர்கள் அதை ஒழித்த பிறகு என்னை வந்து சந்தி யுங்கள்" என்று கூறினார்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்ப தாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கி பதவிக்கு வந்த பிறகு அதை காப்பாற்றாமல் மட்டுமீறிய அதிகாரங் களை அனுபவித்த ஜனாதிபதிகளின் வரிசையில் அநுரா குமார திசாநாயக்க இணைந்து கொள்ள மாட்டார் என்று நம்புவோமாக. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகங்களை...

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊடக ஒடுக்குமுறை தொடர்பில் அரசாங்கத்துக்கு விசேட தேவையொன்று ஏற்பட்டுள்ளது. ஆட்சியைப் பொறுப்பேற்று மூன்று மாதங்களுக்குள் பல சந்தர்ப்பங்களில் அரசாங்கம் ஊடகங்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக அரசாங்கப் பேச்சாளரால் பத்திரிகைகளின் பெயர் குறிப்பிடப்பட்டு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகளை கடுமையாக எதிர்க்கின்றோம்.

நல்லாட்சி அரசாங்கத்திலும் ஊடகங்கள் அரசாங்கத்தின் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தன. ஆனால் நாம் அவற்றை அச்சுறுத்தவில்லை - என்றார். (அ)

## சீனாவில்...

அப்பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

குளிர்காலத்தில் இவ்வாறான சுவாச நோய்கள் ஏற்படுவது வழமையானதாகும். ஆனால் இது பொது சுகாதார அவசர நிலைமைக்கு காரணமாக அமையாது. அந்த வகையில் தற்போது சீனாவில் சுவாச நோய்த்தொற்றுகள் அதிகரித்து வருகின்றன.

இதன் அறிகுறிகளில் இருமல், சளி அல்லது மூக்கில் அடைப்பு, காய்ச்சல் மற்றும் தொண்டை புண் ஆகியவை அடங்கும். கடுமையான சந்தர்ப்பங்களில் மூச்சுத் திணறல் அல்லது மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் நிமோனியாவாக அதிகரிக்கும்.

2001 இல் கண்டுபிடிக்கப்பட்ட இது ஒரு புதிய வைரஸ் அல்ல. இது பொதுவாக சளி அல்லது காய்ச்சலைப் போன்ற அறிகுறிகளுடன் சுவாச நோய்த்தொற்றுகளை ஏற்படுத்துகிறது. சில சமூக ஊடக பதிவுகள் நெருக்கடியை ஏற்படுத்துகின்றன. ஆனால் சீனா அல்லது உலக சுகாதார ஸ்தாபனம் பொது சுகாதார அவசர கால நிலையை அறிவிக்கவில்லை - என்றார். (அ)

## மின்சார...

எரிசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால இந்த குழுவுக்கு தலைமை தாங்குவதுடன், மின்துறை மறுசீரமைப்பு செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் புபுது நிரோஷன் ஹெடிகல்லகே குழுவின் செயலாளராக செயற்படுவார்.

இந்த குழுவின் அழைப்பாளராக எரிசக்தி அமைச்சின் மேலதிக செயலாளர் சந்தன விஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவின் உறுப்பினர்களாக இலங்கை மின்சார சபையின் தலைவர் திலக் சியம்பலாபிட்டிய மற்றும் ஜானக அலுத்கே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். பேராசிரியர் அத்துல ராஜபக்ஷவும் உறுப்பினராக உள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் பீடாதிபதி லிலந்த சமரநாயக்க, சிரேஷ்ட விரிவுரையாளர்களான துஷார ரத்நாயக்க மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் இந்திரா மஹாகலந்த ஆகியோரும் இந்தக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

ஆளும் கட்சி தேர்தல் பிரசாரத்தின் போது, முழு மின்சாரத்துறை சீர்திருத்தங்களை செயல்படுத்தும் அதே வேளையில், போட்டி நிறைந்த சந்தைக்குள் எரிசக்தி செலவைக் குறைப்பதாக உறுதி அளித்தது.

மின்சார சட்டம் தொடர்பில் இந்தக் குழு ஆய்வு செய்து தமது அறிக்கையை சமர்ப்பித்தப் பின்னர் மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த உள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

## வவுனியாவில்...

வியூகங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தவுள்ளது.

கூட்டணிக்குள் இளந்தலைமுறையினரை உள்வாங்குதல் மற்றும் சிரேஷ்ட தலைவர்களின் எதிர்கால அரசியல் பயணம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் உரையாடப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

## மருந்து...

இந்தியாவுக்கு சென்றால் ஒரு கோடியே 50 இலட்சம் வரை செலவா கும். தேவையேற்படின் இதனை தம் மால் நிர்வகித்துச் செல்ல முடியும் என்று இராணுவம் தெரிவித்துள்ளது. அரசாங்கம் எந்தளவு பெருமை பேசிக் கொண்டிருந்தாலும் கிராம மட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் இன்னும் மருந்து தட்டுப்பாடு நிலவுகிறது.

சிறுநீர் பரிசோதனையைக் கூட தனியார் மருந்தகங்களிலேயே எடுக்க வேண்டியுள்ளது. 5000 இற்கும் மேற்பட்ட இதய நோயாளர்கள் சத்திர சிகிச்சைகளில் பங்கேற்க முடியாத நிலைமையில் இருக்கின்றனர். 2026ஆம் ஆண்டு வரை மருந்து தட்டுப்பாடு நிலவும் என்று துறைசார் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். இதனால் சில தனியார் நன்கொடையாளர்கள் தாமாக முன்வந்து சில உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

எந்தவொரு சுகாதார அமைச்சரும் இது தொடர்பில் பேசவில்லை. மருந்து தட்டுப்பாட்டுக்கு அப்பால் வைத்தியசாலைகளில் மேலும் பல பிரச்னைகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலைமையிலேயே தற்போதைய சுகாதார அமைச்சர் எமக்கு பணம் தேவையில்லை, அளவுக்கு அதிகமாகவே சுகாதார அமைச்சு நிதி ஒதுக்கப்படுவதாகக் குறிப்பிடுகின்றார்.

ஆனால் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தற்போது நிவாரணங்களை வழங்கக் கூடியளவுக்கு அரசாங்கத்தின் நிதி நிலைமை இல்லை எனக் கூறுகின்றார். இருவரில் யார் கூறுவது உண்மை எனத் தெரியவில்லை. சுகாதார அமைச்சரது மமதைப் பேச்சுக்களால் மக்களுக்கு கிடைக்கவிருக்கும் நன்மைகளையும் இழக்க வேண்டியேற்படும் - என்றார். (அ)

## அரசு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

76 ஆண்டுகளின் பின்னர் இம்முறை அதிக விலையில் பாற்சோற்றை உண்ணவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். இந்த அரசாங்கம் பதவியேற்கும்போது 170 ரூபாவாகக் காணப்பட்ட சிவப்பரிசியின் விலை தற்போது 280 ரூபா வரை உயர்வடைந்துள்ளது.

100 நாட்களில் அரிசியின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்த அரசாங்கம் வெட்கப்பட வேண்டும்.

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு அறவிடப்படும் 65 ரூபா வரியைக் குறைத்து, உள்நாட்டு சந்தையில் போட்டித்தன்மையை ஏற்படுத்தி குறைந்த விலையில் மக்களுக்கு அரிசியை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கம் மக்களை பாதுகாப்பதற்கு பதிலாக அரிசி ஆலை உரிமையாளர்களை பாதுகாத்துக்கொண்டிருக்கிறது.

தமது பிரச்னைகளுக்கு தீர்வு கிட்டும் என்று எதிர்பார்த்த மக்கள் இன்று அமைச்சர்களின் பிரச்னைகளைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். மக்கள் இதற்காக மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கவில்லை.

விரைவில் ஐக்கிய மக்கள் சக்தியை மறுசீரமைத்து பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் மக்களுக்கான சேவையை ஆற்றுவோம் - என்றார். (அ)

# நிமோனியா காய்சலால் குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,ஜன.05

நிமோனியா தொற்று காரணமாக யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். புன்னாலைக்கட்டுவன் வடக்கு பகுதியைச் சேர்ந்த யுவானிஸ் நேசராசா (வயது 42) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

இவர் கடந்த 30ஆம் திகதி முதல் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் கடந்த 3ஆம் திகதி இரவுக்கு திடீரென உடல்நிலை மோசமடைந்ததால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பிக்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று பிற்பகல் 3 மணியளவில் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இவர் நிமோனியா தொற்று ஏற் பட்டதால் உயிரிழந்ததாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (05)

# அனுபவமற்ற அணியிடம் நாடு பெறுபேறு பயங்கரமானதாகும்

## ஐக்கிய தேசிய கட்சி எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 05

நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்தை அனுபவமில்லாத அணியொன்றுக்கு மக்கள் பொறுப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதன் பெறுபேறு மிகவும் பயங்கரமானதாகும். இது பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்போது ஐக்கிய தேசியக் கட்சி சவால்களை ஏற்றுக்கொண்டு நாட்டையும் மக்களையும் பாதுகாக்க தயாராக இருக்கின்றதென ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உத்தியோகபூர்வ காரியாலயத்தில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வங்குரோத்து அடைந்த இந்த நாட்டை பொறுப்பேற்று, குறுகிய காலத்துக்குள் ஸ்திர நிலைக்கு கொண்டு வந்தார். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அவர் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாட்டுவதற்கு முன்னர் அதற்கு தேவையான சட்ட திட்டங்களை பாராளுமன்றத்தில் அனுமதித்துக்கொண்டார். அதன் பின்னரே நாணய நிதியத்துடன் கலந்துரையாடி அதன் உதவியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதனால் தற்போதைய அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கையை அவ்வாறே மேற்கொள்வதாக இருந்தால் ரணில் விக்கிரமசிங்க அனுமதித்துக்கொண்டு புதிய சட்டங்களை அவ்வாறே முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக பாராளுமன்ற வரவு செலவுதிட்ட காரியாலயத்தை உயிர்ப் பிக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது. அதேபோன்று ஊழல் மோசடி எதிர்ப்பு சட்டம் போன்றவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த சட்டங்களில் ஒன்றையேனும் அர சாங்கம் மீறினால் நாடு வீழ்ச்சியடைய ஆரம்பிக்கும்.

என்றாலும் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று மாத காலத்தில் அதன் நடவடிக்கைகளை பார்க்கும்போது புதிய மாற்றம் என எதனையும் காணவில்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த வேலைத் திட்டத்தையே இதுவரை பின்பற்றி செல்கிறது. அது தொடர்பில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியை கைவிட்டு செல்லும்போது, அதிகாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாடு நெருக்கடிக்குள்ளாகும்போது எந்த சந்தர்ப்பத்திலும் சவால்களை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார். அரசியல் அனுபவம், ஆட்சி செய்த அனுபவம் மிகவும் முக்கியமாகும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு அரசாங்கம் 2025ஆம் ஆண்டை ஆரம்பிக்க வேண்டும் என நாங்கள் பிராத்திக்கிறோம். நாட்டை நிர்வகிப்பதற்கு மாத்திரமல்ல, அனைத்து துறைகளுக்கும் அனுபவம் முக்கியமாகும்.

என்றாலும் 2025ஆம் ஆண்டு எங்களது பொறுப்பை எந்தவிதமான அனுபவமும் இல்லாத அணியொன்று பொறுப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் பெறுபேறு மிகவும் மோசமானதாகும். அதுதொடர்பில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. அந்த பெறுபேறு மிகவும் மோசமான நிலைக்கு வரும்போது ஐக்கிய தேசிய கட்சி மற்றும் எம்முடன் ஒன்றிணையும் அணிகளுடன் சவால்களை பொறுப்பேற்றுக்கொண்டு நாட்டையும் மக்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம் - என்றார். (அ)

## உள்ளூராட்சி...

நடத்துவதற்கும், புதிதாக வேட்பு மனுக்களை கோருவதற்கும் ஏற்பாக விடயதானங்களை இயற்றுவதற்கும், அதற்கான சட்டங்களை இயற்றுவதற்கும் வகையிலான சட்டவரைவு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சரின் பணிப்புக்கு அமைய விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தல் தொடர்பான சட்டவரைவை இவ்வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன குறிப்பிட்டார். (அ)

## பாடசாலை...

அதிபர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

சுவாச நோய்களின் அபாயத்தைக் குறைக்க தடுப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தவேண்டும்-என்றார். (அ)

## வடக்கு...

அன்னராசா, வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் முகமட் ஆலம், வட மாகாண இணையத்தின் உப தலைவர் அன்ரனி அல்பிரெட் ஆகியோர் ளகலந்துகொண்டனர்.

மீன்பிடிச் சட்டம், இந்திய மீனவர்களின் வருகையால் ஏற்படுகின்ற பாதிப்புகள், கூட்டுறவை வளப்படுத்துதல் தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## புலமைப்பரிசில் விடைத்தாள் திருத்தும் பணி அடுத்த வாரம்!

கொழும்பு, ஜன. 05

2024 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் குறித்த பணிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

அதன்படி, குறித்த விடைத்தாள் திருத்தும் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு பெறுபேறுகள் வழங்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

கடந்த செப்டம்பர் மாதம் 15ஆம் திகதி 2,849 பரீட்சை மத்திய நிலையங்களில், 2024 ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்பட்டதுடன், அதில் 323,879 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

குறித்த பரீட்சையின் முதல் பகுதி வினாத்தாளில் 3 வினாக்கள் பரீட்சைக்கு முன்னதாகவே கசிந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டது

இது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பான உத்தரவு ஒன்றைக் கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி உயர்நீதிமன்றம் அறிவித்தது.

குறித்த பிரச்னைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட நிபுணர் குழு முன்வைத்த மூன்று பரிந்துரைகளில் மிகவும் பொருத்தமான ஒன்றைத் தெரிவு செய்து அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அமைய, ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் பகுதி வினாத்தாளில் கசிந்த 3 வினாக்களுக்கும் முழுமையான புள்ளிகளை வழங்குவதற்குப் பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிலையில், குறித்த பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## வடமராட்சி கிழக்கு கடலில் இறந்து ஒதுங்கும் ஆமைகள்!

யாழ்ப்பாணம், ஜன. 05

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கடற்பகுதியில் இறந்த நிலையில் ஆமைகள் கரை ஒதுங்குவதாக, அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினமும் நாகர்கோவில் கடற்பகுதியில் ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

கடலில் கடும் காற்று வீசத் தொடங்கியுள்ளதால் அலைகளின் சீற்றம் வழக்கத்திற்கு மாறாக அதிகரித்து காணப்படுவதாகவும், இதன் காரணமாகவே ஆமைகள் இறந்து கரையொதுங்குவதாகவும் கரையொதுங்கிய ஆமைகளின் உடலில் காயங்கள் காணப்படுவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடமும் இதே காலப்பகுதியில் வடமராட்சி கிழக்கின் பல இடங்களில் ஆமைகள் இறந்து கரையொதுங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ)

## விசுவமடு திருட்டு சம்பவம் தந்தையும், மகனும் கைது!

முல்லைத்தீவு, ஜன. 05

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு விசுவமடு பகுதியில் கடந்த வருடம் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய தந்தையும் மகனும் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் குறித்த பகுதியில் வீட்டுத் தளபாடங்கள், மோட்டார் சைக்கிள் என்பன களவாடப்பட்டிருந்தன.

குறித்த சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளரால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதற்கமைவாக முன்னெடுக்கட்ட விசாரணையில், திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் திருடிய பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர்.

புன்னை நீராவி விசுவமடுவில் வசிக்கும் 72 வயதான தந்தையும் இவரது 24 வயதான மகனும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இளங்குமரன் எம்.பி சட்டத்தை தனது கையில் எடுக்கமுடியாது

### யாழ். தொழிலதிபர் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜன. 05

**எமது வர்த்தக நிறுவனம் சட்ட ரீதியாகவே சுண்ணக்கல் வியாபாரத்தில் ஈடுபடுகிறது. பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் உண்மையான விடயங்கள் தெரியாமல் எமது வர்த்தக நிறுவனத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியுள்ளார் என சிற்றி வன்பொருள் வர்த்தக நிறுவனத்தின் உரிமையாளர் தெரிவித்தார்.**

இச்சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தான் ஒன்றை முறைப்பாடு பதிவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் 65 வருட காலமாக கட்டடப் பொருள் வியாபாரத்தை நாம் செய்து வருகிறோம். இவ்வாறான நிலையில் எமது நிறுவனத்துக்கு சொந்தமான வாகனம் சுண்ணக் கற்களை திருகோணமலைக்கு கொண்டு செல்லும் வழியில் சாவகச்சேரியில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வீதியின் குறுக்காக தனது வாகனத்தை நிறுத்தி மறித்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்தும் வகையில் தனது வாகனத்தை எமது வாகனத்துக்கு முன்னால், பிரதான வீதியில் நிறுத்தி சாரதியை மிரட்டி வாகன திறப்பை வாங்கியமை சட்டத்துக்கு விரோதமான செயற்பாடு.

1992 ஆம் ஆண்டு 33 இலக்க சட்டத்தின் 28 (1)( 2) பிரிவுகளின் பிரகாரம் எமது வாகனம் சுண்ணக் கற்களை எடுத்துச் சென்றது. முதலாவது பிரிவானது கனியவளங்களை அகழ்வதற்கான அனுமதி, எடுத்துச் செல்வதற்கான வழி அனுமதிப்பத்திரம் என்பவற்றை பற்றி கூறுகிறது. அதன் பிரகாரம் கல் ஆலைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

கல் உடைக்கும் ஆலைகள் தமது வியாபார நிலையத்தை பதிவு செய்துள்ளார்கள். மத்திய சுற்றடல் அதிகாரசபையின் அனுமதி பெற்றுள்ளார்கள் அதுமட்டுமல்லாது கனியவளத் திணைக்களத்தில் அனுமதி பெற்றுள்ளார்கள்.

நவீன தொழில்நுட்பத்தின் மூலம் கொழும்பிலிருந்து ஜி.பி.எஸ் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு சகல அனுமதிகளும் பெற்றவர்களிடமிருந்து நாம் கல்லை மட்டும் வாங்குகிறோம். நாம் கிடங்கு கிண்டுவதோ அல்லது கல்லை உடைப்பவர்களோ அல்லர்.

முறைப்படி அனுமதி பெற்றவர்களிடமிருந்து பணம் கொடுத்து அவர்களின் கல்லை வாங்கி திருகோணமலைக்கு கொண்டு செல்கிறோம். அதில் நாமும் சிறிய இலாபம் அடைவதோடு கல்லுடைக்கும் தொழிலாளர்கள் மற்றும் கல் ஆலைகளை நம்பி தொழில் செய்பவர்களின் வாழ்வாதாரத்தையும் நாம் பாதுகாத்து வருகிறோம்.

இலங்கைச் சட்டத்துக்கு உட்பட்டு எமது வியாபார நடவடிக்கைகள் அன்றிலிருந்து இன்றுவரை இடம்பெற்று வரும் நிலையில் இதை அறியாத சிலரின் தூண்டுதலின் பேரில் எமது நிறுவனத்தையும் எமது வியாபாரத்தையும் அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் இளங்குமரன் எம்.பி செயல்பட்டிருக்கிறார்.

பிரிவு இரண்டின் பிரகாரம் அரை கனியங்களை எடுத்து செல்வதற்கான அனுமதி தேவையில்லை. இதை அறியாத இளங்குமரன் எம்.பி எமது வாகனத்தை மறித்து கற்களுக்கு மேல் போடப்பட்டிருந்த பாதுகாப்பு உறையினை கிழித்து சட்டத்தை தன் கையில் எடுத்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் கடற்தொழில் அமைச்சரை சந்திப்பதற்கு சென்றேன். அவர் அங்கு இல்லை. எனது ஆதாரங்களை அவரது அலுவலகத்துக்கு சமர்ப்பித்தேன். அதனை ஆராய்ந்த அவரது அலுவலக உத்தியோத்தர் அமைச்சரிடம் குறித்த விடயம் தொடர்பில் கூறினார். அதன் பின்னர் என்னிடம் பேசினார்.

நீங்கள் சட்டத்துக்கு உட்பட்டு செய்வதை செய்யுங்கள் எனக் கூறினார். இது எனக்கு ஆறுதல் அளித்தது. ஆகவே மாற்றத்தை விரும்பிய மக்களுக்கு ஏமாற்றத்தை வழங்குவது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல - என்றார். (அ-05)

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் திருவெம்பாவை பாராயணம் இசைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 05


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் 5 ஆவது வருடமாக நேற்றையதினமும் திருவெம்பாவைப் பாராயணம் இசைக்கப்பட்டது.

பரமேஸ்வரா ஆலயத்திலிருந்து ஆரம்பித்து கலட்டிச் சந்தி ஊடாக யாழ்பல்கலைக்கழக பால சிங்கம் விடுதியைக் கடந்து தபாற்பெட்டிச் சந்தி ஊடாக பரமேஸ்வராச்சந்தி வழியாக மீண்டும் யாழ். பல்கலைக் கழகத்தை திருவுலா வந்தடைந்தது.

மேற்படி பாராயணத்தில் யாழ் இந்து மன்ற பெரும் பொருளாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சி.ரமணராஜா, கலைப்பீட மாணவர் ஒன்றிய பெரும் பொருளாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சு. கபிலன் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து ஒவ்வொருநாளும் திருவெம்பாவை பாராயணம் இடம்பெற்று இறுதி நாள் யாழ்.பல்கலைக் கழக பரமேஸ்வரா முன்றலில் இருந்து மாணிக்கவாசகர் எழுந்தருளி யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம் , திருநெல்வேலி சந்தி , பரமேஸ்வரா சந்தி ஊடாக மீண்டும் யாழ் பல்கலைக்கழகத்தினை வந்தடையும் .

மேலும் திருவெம்பாவை விரத நாளினை முன்னிட்டு கடந்த 2022 ஆண்டு யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கபட்ட மார்கழி விழாவும் சிறப்புற இடம்பெறவுள்ளது. (அ-05)



## துமிந்த சில்வாவின் நிலையை ஆராய்வதற்கு மருத்துவக்குழு

கொழும்பு, ஜன. 05

தற்போது சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள துமிந்த சில்வாவின் உடல்நிலையில் சுகயீனம் இருப்பதாகக் கூறப்பட்டதையடுத்து, அவரது உடல்நிலையை ஆராய்வதற்காக வைத்திய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் கூறுகிறார்.

சிறைச்சாலைத் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, துமிந்த சில்வாவுக்கு சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்படவேண்டுமா என்பதைக் கண்டறிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் மருத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, எதிர்வரும் சில நாட்களுக்குள், சம்பந்தப்பட்ட மருத்துவக் குழு துமிந்த சில்வாவை பரிசோதித்து, அவரது உடல்நிலை தொடர்பான அறிக்கையை சிறைச்சாலை திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கும் என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், துமிந்த சில்வாவுக்கு தனியான கழிவறை வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டை சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் மறுத்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.